


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 52 குரோதி வருடம் மார்கழி மாதம்
05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 18 (20.12.2024)




# முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கிய மியன்மார் அகதிகள் படகு



35 சிறுவர்கள், கர்ப்பிணி பெண் உட்பட 102 பேர்

சண்முகம் தவசீலன், சதீஸ்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டு ஆழ்கடல் மீன்பிடிப்படகொன்று 102 ரொஹிங்கியா அகதிகளுடன் நேற்று கரை ஒதுங்கியது.

அந்த படகில் 35 சிறுவர்கள், கர்ப்பிணி பெண் உட்பட 102 பேர் இருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

மியன்மாரில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்டு வேறொறு நாட்டில் தஞ்சமடைவதற்காக கடலில் சென்று கொண்டிருந்த பொழுது கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு இந்தக்கப்பல் கரையொதுங்கியிருக்கலாமென கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

02 →





## முன்பள்ளிச் சிறார்: காலை உணவு கொடுப்பனவு அதிகரிப்பு



முன்பள்ளி நிலையங்களில் சிறார்களுக்கு வழங்கப்படும் காலை உணவு வேலைத்திட்டத்தில் ஒரு பிள்ளைக்காக தற்போது வழங்கப்படும் 60 ரூபாவை 100 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் 155,000 பிள்ளைகள்

02 →

## ஞானசார தேரருக்கு பிடியாணை



இஸ்லாம்மதத்தைஇழிவுபடுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று (19) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றில் ஆஜராகாததால் அவரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று (19)அறிவிக்கப்பட இருந்தது.

02 →



## அகதிகளை மனிதாபிமானத்தோடு கையாளுங்கள் - ரவிஹரன் எம்.பி

இலங்கையில் தஞ்சம் அடைந்துள்ள மியன்மாரின் ரோஹிங்கிய அகதிகளை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிஹரன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கடற் பரப்பில் கரை ஒதுங்கிய

02 →

## நவ நாசிசத்தை எதிர்க்க ஐ.நாவில் ரஷ்யாவுடன் கைகோர்த்த இலங்கை

### அமெரிக்கா உட்பட மேற்குலகம் எதிர்ப்பு

சுப்ரமணியம் நிஷாந்தன்

நாசிசம் மற்றும் நவ நாசிசத்தை எதிர்க்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ரஷ்யா, இலங்கை உட்பட 119 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானத்துக்கு எதிராக 53 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், 10 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

“நாசிசம், நவ-நாசிசம் மற்றும் இந்த கோட்பாட்டை சார்ந்த விடயங்களை ஊக்குவித்தல், இனவாதம், இனப் பாகுபாடு, இனவெறி சார்ந்த வடிவங்களைத் தூண்டுவதற்கு எதிராக போரிடுதல்“ என்ற தலைப்பில் ரஷ்யாவின் ஆதரவுடன் ஐ.நா பொதுச் சபையில் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்தை ரஷ்யா, இலங்கை, மாலைத்தீவு,

02 →

## உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி



உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

02 →

## அரச மருத்துவர்களின் ஓய்வு வயது 63ஆக நீடிப்பு

அரச மருத்துவர்களின் ஓய்வு வயதை 63 ஆக நீடிக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று(19) வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

02 →

## மதுபானசாலை அனுமதிக்கு சிபாரிசு செய்தவர்களின் பெயர்களை அநுர அரசு உடனடியாக வெளியிட வேண்டும்




கடந்த அரசால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைச் சிபாரிசு செய்தவர்களின் பெயர்ப் பட்டியலைத் தற்போதைய அரசு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

யாழ். வடமராட்சி, உடுப்பிட்டி – இமையாணன் மேற்குப் பகுதியில் உள்ள மதுபானசாலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குறித்த மதுபானசாலை அகற்றப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த மனுவை 32 பொது அமைப்புக்கள் சேர்ந்து தாக்கல் செய்திருந்தன. இந்நிலையில், இந்த மதுபானசாலை ஏன்

02 →

## எட்கா ஒப்பந்தம்: அமுல்படுத்த அரசாங்கம் இணங்கியதா?

### முக்கிய அறிவிப்பு இன்று வெளியாகும்

சுப்ரமணியம் நிஷாந்தன்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணத்தில் இரு நாடுகளும் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகள் மற்றும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ள உத்தேச திட்டங்கள் தொடர்பிலான விசேட அறிவிப்பை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடவுள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவிலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர்பில் எவ்வித அறிவிப்புகளையும் அரசாங்கம் வெளியிடவில்லை எனவும் எட்கா உடன்படிக்கையை செய்துகொள்ள அரசாங்கம் இணங்கியுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன எனவும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் இந்திய பயணம் மற்றும் அங்கு பேசப்பட்ட

02 →

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைப்பு

## தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல்

சுப்ரமணியம் நிஷாந்தன்



முன்னாள் ஜனாதிபதிகளுக்கான இராணுவப் பாதுகாப்பு நீக்கப்படுவது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

02 →

## அவுஸ்திரேலியாவில் இலங்கை பிரஜைக்கு 37 வருட சிறை

தனது மனைவியைத் தாக்கி கொலை செய்த குற்றத்துக்காக அவுஸ்திரேலியாவில் இலங்கையர் ஒருவருக்கு 37 வருட சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விக்டோரியா நீதிமன்றினால் 47 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் தகராறொன்றின்போது, அந் நபர் தனது மனைவியை கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்ததுடன் தனது மகனையும் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# மின்சார சபையின் திட்டங்களுக்கு 150 மில்லியன் டொலர் கடனுதவி ஒப்பந்தம் கைச்சாத்தானது



ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கை மின்சார சபையின் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 150 மில்லியன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தம் நேற்று (19) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த கடன் தொகையை இலங்கை அரசாங்கத்தின் ஊடாக இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை கடந்த ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்டது.

அதன்படி கடந்த நவம்பர் மாதம் அதற்கான கடனுதவிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த கடன் தொகையை பயன்படுத்தி நாட்டின் மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்த பல அத்தியாவசிய திட்டங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்காலத்தில் நாட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க திட்டங்களின் அமைப்பில் சேர்க்கும் வகையில் பல அத்தியாவசிய மின் கட்டமைப்பு திட்டங்களும் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அர்ஜுன் மகேந்திரனை கைதுசெய்ய உத்தரவு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் பேர்ப்பச்சுவல் டிசரிஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அஜான் கார்திய புஞ்சிஹேவா ஆகியோரை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பிலான குற்றம் சாட்டப்பட்டுள்ள இவர்கள் இந்த வழக்கு தொடர்பிலான விசாரணைகளுக்காக நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகி இருக்காமையின் காரணமாகவே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறபித்துள்ளது.

இந்த வழக்கு மீண்டும் அடுத்த வருடம் ஜுன் மாதம் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் மத்திய வழங்கியின் ஆளுநராக சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மகேந்திரனை அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க ந

ஆளுநராக நியமிக்கப்பட்ட சில வாரங்களிலேயே மத்திய வங்கி பிணை முறி வழங்கலில் பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் இதுதொடர்பில் விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், விசாரணைகளில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் பிரகாரம் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பிணைமுறியை கொள்வனவு பேர்ப்பச்சுவல் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட மோசடியுடன் தொடர்புடைய பலர் கைதுசெய்யப்பட்டனர்.

என்றாலும், உரிய விசாரணைகள் மற்றும் வழக்கு தாக்கல்கள் இடம்பெறாதமையால் இந்த விவகாரம் கிடப்பில் போடப்பட்டது. தற்போதைய அரசாங்கம் இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகளை மீள ஆரம்பிக்க வழங்கியுள்ள உத்தரவின் பிரகாரம் விசாரணைகள் மீள ஆரம்பமாகியுள்ள நிலையிலேயே இந்த கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டள்ளது.

# ஆசிரியர் ஆளணி கணிப்பீடு புதிய சுற்றுநிருபம் கிழக்கில் நடைமுறையில் இல்லை

(முகம்மட் முக்தார்)

கல்வியமைச்சின் ஆசிரியர் ஆளணியை கணக்கிடுதல் தொடர்பான 06-2021 ம் இலக்க சுற்றுநிருபம் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தாமை காரணமாக ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்ப முடியாத நிலை நிலவுவதாக கல்விசார் தொழிற்சங்கங்கள் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன.

கல்வியமைச்சினால் மேற்படி சுற்று நிருபம் வெளியிடப்பட்டு சுமார் நான்கு வருடங்களாகியும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர்களை கணிப்பீடு செய்யாமல் கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள திட்டமிடல் பிரிவு அசிரத்தையாக உள்ளது.

சுமார் 08 வருடங்களுக்கு முன்னர் கல்வி அமைச்சு வெளியிட்ட 01-2016 ம் இலக்க சுற்றுநிருபத்திற்கமையவே கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர் தேவையை கணிப்பீடு செய்து வருகிறது.

கல்வியமைச்சின் 06-2021 ம் இலக்க சுற்று நிருபம் வெளியிடப்பட்ட பின் ஏற்கனவே கல்வி அமைச்சு வெளியிட்ட 01ஃ2016 ம் இலக்க சுற்று நிருபம் வலுவற்றதாகிய போதும் கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் அதனை பின்பற்றுவதனால் பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன.

கல்வி அமைச்சின் 06-2021 ம் இலக்க சுற்றுநிருபம், கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டால் பல பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்குமெனவும் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கமும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### முள்ளிவாய்க்காலில்...

குறித்த நாட்டுப்படகில் இருந்தவர்கள் பத்து நாட்களாக கடலில் உணவு பற்றாக்குறையால் அவதிப்பட்டுள்ளனர், படகு கரையொதுங்கிய வேளை சிலர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டனர்.அவர்களுக்கு உணவுகள், உலருணவுகள்,குடிநீர் என்பவற்றை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கினார்கள்.

இந்த நிலையில் ஸ்தலத்துக்கு விரைந்த கடற்படையினர் கப்பலில் ஏறி நிலைமைகளை அவதானித்தனர். மிகவும் சோர்வடைந்த நிலையில் கப்பலில் இருந்தவர்கள் காணப்பட்டதாக தெரிவித்த கடற்படையினர், அவர்களை உடல்நலத்தை பரிசீலித்தனர். 10 நாட்களுக்கு மேல் அவர்கள் கப்பலில் பயணம் செய்ததாக தெரியவந்த போதிலும் அவர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படவில்லை என தெரிவித்தனர்.

இதனை அடுத்து, திருகோணமலையிலுள்ள கடற்படை முகாமுக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்கு கடற்படையினர் தீர்மானித்தனர். இதனையடுத்து அகதிகள் அனைவரும் கடற்படை படகின் துணையோடு, திருகோணமலைக்கு கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கடற்படை அதிகாரி, ”அவர்களோடு சரியாக பேசிக்கொள்ள முடியாத நிலை இருந்தது. மொழிப் பிரச்சினையால், முழுமையாக உண்மை நிலையை பெற முடியவில்லை ” எனக் கூறினார்.

என்றாலும் மனிதாபிமான அடிப்படையில் உணவு,உடை வழங்கப்பட்டு உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் கடற்படை அதிகாரி கூறினார்.

இதேவேளை, ஸ்தலத்துக்கு விரைந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், படகில் சென்று அகதிகளை பார்வையிட்டார். என்றாலும் அவர்களோடு நேரடியாக உரையாட முடியவில்லை என ஒருவன் பத்திரிகைக்கு கருத்து தெரிவித்த அவர், ”அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். மொழிப் பிரச்சினையால் பேச முடியவில்லை ” என்றார்.

### தேசிய பாதுகாப்புக்கு...

“முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பை நீக்குவது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலான காரணியாகும். பிரபல்யமான தீர்மானங்களின் பின்னிற்க நாம் தயார் இல்லை. இதுதொடர்பிலான உண்மை நாட்டுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். புலிகளை ஒழிக்க முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் பாரிய பங்களிப்பை வழங்கினர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யுத்தகாலத்தில் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றியிருந்தார். அவரது உயிரை பறிக்க புலிகள் ஐந்துமுறை முற்பட்டிருந்தனர் என்பதை முழு நாடும் அறியும். ஜனாதிபதி பதவியின் பின்னர் அவர்களுக்கான பாதுகாப்பு நீக்கப்படுமாயின் பதவி காலத்தில் பயங்கரவாதத்தை ஒழிக்கவும், பாதாள உலகத்தை ஒடுக்கவும், போதைப்பொருளை ஒழிக்கவும் ஜனாதிபதிகள் அச்சப்படலாம்.

அவர்கள் பாரதூரமான தீர்மானங்களை எடுக்க வேண்டுமாயின் அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதிகளுக்கு நீங்கள் ஐந்து வருடங்கள் அல்லது பத்து வருடங்கள்தான் இந்த பதவியில் இருப்பீர்கள், அதன் பின்னர் நாம் பார்த்துக்கொள்கிறோம் என பாதாள உலகத்தினர் அச்சுறுத்தல் விடுக்க முடியும்.

ஜனாதிபதிகளுக்கான இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியது முட்டாள்தனமான தீர்மானமாகும். நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதால் இராணுவத்தினருக்கு தற்போது பணியில்லை. ஆனால், பொலிஸாருக்கு நாட்டில் அதிக பணி இருக்கிறது. அதனால் பொலிஸாருக்கு பதிலாக இராணுவத்தினருக்குதான் குறித்த பாதுகாப்பு பணியை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாகனத்தின் கதவை தானே திறந்துகொண்ட இறங்கியதாக இளம் தலைமுறையினர் சமூக ஊடகங்களில் புகழ்ந்து எழுதி வருகின்றனர்.அவர்கள் புகழ்வது தொடர்பில் நாம் புதுமையடையவில்லை. ஆனால், ஜனாதிபதியின் பாதுகாப்பு தலைமை அதிகாரி விசேட பிரதநிதிகளுக்கான பாதுகாப்பு தொடர்பில் அறியாமையில் உள்ளார் என்பதே உண்மை. அவர் உடனடியாக பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும்.

ஒரு அரச தலைவர் ஒருவர் வாகனத்தில் இருந்து இறங்கும் போதுதான் இலகுவாக எதிரிகளால் தாக்குதல்களுக்கு உள்ளாக்க முடியும். அவர் வாகனத்தில் இருந்து இறங்கும் இடம் பாதுகாப்பு குறைவான இடமாகவே இருக்கும். அதனால் தான் உலகம் முழுவதும் விசேட பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஜனாதிபதியின் தலைமை பாதுகாப்பு அதிகாரி இது தொடர்பில் அறிந்திருக்க வேண்டும். ஆனால், அவருக்கு இதுதொடர்பில் போதிய அறிவு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி வாகனத்தில் இருந்து இறங்குவதற்கு முன்னர் சுற்றியுள்ள பாதுகாப்பு தொடர்பில் அறிந்து அதன் பின்னரே அவர் கதவை திறக்க வேண்டும். ஜனாதிபதியாக தெரிவான ஒருவருக்கு கதவை திறக்க முடியாது போகும் என்பதல்ல அதன் அர்த்தம். அவர் அரச தலைவர். அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கிறது என்பதாலேயே பாதுகாப்பு நிலைமைகள் குறித்து அவதானித்த பின்னர் கதவு திறந்துவிடப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேசிய மக்கள் சக்தியின் தலைவர் மாத்திரமல்ல. தற்போது அவர்தான் எம் அனைவருக்கும் தலைவர். நாட்டின் தலைவர் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்” என்றார்.

### எட்கா ஒப்பந்தம்:

மற்றும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாளை (இன்று) விசேட அறிவிப்பொன்றை வெளிவிவகார அமைச்சில் விடுக்க உள்ளார் என பதில் அளித்தார்.

### மதுபானசாலை அனுமதிக்குப்

மூடப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டும் விசாரணை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது, மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், கடந்த அரசால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைச் சிபாரிசு செய்தவர்களின் பெயர்ப் பட்டியல்களை தற்போதைய அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்துடன் கற்காதவர்கள் நிதி கொடுத்துப் பெற்ற பட்டமே கலாநிதிப் பட்டம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உங்களது அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறியமை வரவேற்கத்தக்கது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

### நவ நாசிசத்தை...

தென்னாபிரிக்கா, லெசோதோ உட்பட 119 நாடுகள் ஆதரித்தன.

எனினும், ஜெர்மனி, இத்தாலி, கனடா, அமெரிக்கா, உக்ரைன், ஜப்பான் உள்ளிட்ட 53 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை மறுபரிசீலனை செய்ய அல்லது நாஜி சித்தாந்தத்தை ஊக்குவிப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் கண்டிக்கும் தீர்மானமாக இது உள்ளது.

நவ நாசிசத்தை நிராகரிப்பது, நாஜி நபர்களை ஊக்குவிப்பது மற்றும் வாஃபென் எஸ்எஸ் அமைப்பை எந்த வடிவத்திலும் நிராகரிப்பதன் முக்கியத்துவத்தை ரஷ்யாவின் இந்த ஆதரவு தீர்மானம் வலியுறுத்துகிறது. இரண்டாம் உலகப் போரின் படிப்பினைகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், இனவெறி, இனவெறி மற்றும் சகிப்புத்தன்மையின் அனைத்து வடிவங்களிலும் போராட வேண்டியதன் அவசியத்தையும் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

### முன்பள்ளிச் சிறார்:...

இதன்மூலம் பயனடையவுள்ளனர்.

2017 ஆம் ஆண்டு முதல், சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் எடை குறைந்த சிறுவர்கள் அதிகம் உள்ள பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில் முன்பள்ளிச் சிறார்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் நடைமுறைப்படுத்துகிறது.

தற்போது நாட்டில் உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ஒதுக்கப்படும் 60 ரூபாய் போதுமானதாக இல்லாததால், ”பாலர் பள்ளிகள்” என்ற அளவுகோலின் அடிப்படையில் தொகையை 100 ரூபாயாக உயர்த்த வேண்டும் எனவும் எடை குறைந்த சிறார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள், முன்பள்ளிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த மகளிர் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்ததுள்ளது.

### ஞானசார தேரருக்கு...

எனினும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

சுகயீனம் காரணமாக அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாமல் போனதாக ஞானசார தேரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, வழக்கின் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதன்படி ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

### உப்பு இறக்குமதிக்கு...

இந்நிலையில் அதற்குத் தீர்வாகப் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

### அரச மருத்துவர்களின்...

இதில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது,

இது ஓய்வூதிய சட்டத்தின்படி திருத்தப்பட உள்ளது. இந்த முடிவினால், இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் ஓய்வு பெற இருந்தவர்கள், 63 வயது வரை சேவையாற்ற வாய்ப்பு உள்ளது.

அதன்படி, விசேட வைத்திய நிபுணர்கள், அனைத்து தர மருத்துவ அலுவலர்கள், சிறப்பு பல் சுகாதார நிபுணர்கள், அனைத்து பல் சுகாதார நிபுணர்கள், அனைத்து நிர்வாக தர மருத்துவ அலுவலர்கள் மற்றும் அனைத்து அரசு பதிவு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக நீடிக்கப்படும்.

இதற்கு முன்னர் 65 வயதிலிருந்த கட்டாய ஓய்வை 2022 ஆம் ஆண்டு 60 வயதாக கடந்த அரசாங்கம் குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அகதிகளை...

படகில் இருந்த, மியான்மார் அகதிகள் 102 பேரையும் படகுமூலம் சென்று பார்வையிட்ட அவர், முள்ளிவாய்க்கால் கடற்கரையில் வைத்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

” அகதிகள் பிரச்சினையை அனுபவித்தவர்கள் நாங்கள். இன்னமும் அனுபவித்தவாறே இருக்கிறோம். பச்சிளம் குழந்தைகளோடு தஞ்சம் அடைந்திருக்கும் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, மனிதாபிமானத்தோடு கையாள வேண்டும். ”

”அவர்களைப் பார்க்கின்ற பொழுது, மிகவும் கவலையாக இருக்கிறது. உயிரைப் பணயம் வைத்து, வேறொரு நாட்டுக்கு செல்வதற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.”

இவ்வாறு அவர் நேற்று தெரிவித்தார்.

# மத்திய மாகாண கூட்டுறவுத் துறையில் ரூ.765 கோடி ஊழல்



## கூட்டுறவுச் செயற்பாட்டாளரான டி.கே.கீர்த்திசிங்க தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாண கூட்டுறவுத் துறையில் கடந்த காலங்களில் ஏறத்தாழ 765 கோடி ரூபா மோசடிகள், ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இவற்றுக்குப் பின்னால் அரசியல்வாதிகள், ஆளுநர்கள், அதிகாரிகளும் இருப்பதாகவும் முன்னாள் கிராம அதிகாரியும், கூட்டுறவுச் செயற்பாட்டாளருமான டி. கே. கீர்த்திசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் உள்ள சுமார் 2,000 கூட்டுறவுச்சங்கங்களில், 1,700 பேர் செயலிழந்துள்ள நிலையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் (18) கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கிர்த்திசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர்,

இந்த மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பான 07 கிலோ எடையுள்ள 1100 கோப்புகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளோம். அது தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலர் இந்த ஊழல் மோசடிகளுக்கு பின்னணியில் இருக்கின்றனர். எத்தனை முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இந்த மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை கூட்டுறவுச்சங்க உறுப்பினர் வைப்பு செய்த தொகையான 750 கோடி ரூபாவுக்கும், கூட்டுறவு சங்கங்கள் பெற்ற அரசு உதவியான 15 கோடி ரூபாவுக்கும் எதுவும் நடக்கவில்லை. இதில், கணக்காய்வு துறை உண்மைகளை வெளியிட்டும் அதிகாரிகள் மௌன நிலையை கடைபிடிக்கின்றனர்.

மோசடி மற்றும் ஊழலை தடுக்கும் பிரதான நோக்கத்துடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று நம்பிக்கை வைக்கிறேன்.

மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் லலித் யூ கமகே, கிராம அதிகாரிகளை இடமாற்றம் செய்வது, விழாக்களில் பங்கேற்பது என்பவை தவிர வேறு எதையும் செய்யவில்லை. கூட்டுறவுத் தொழிலில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் நாம் அளித்த முறைப்பாடுகள் எதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

மத்திய மாகாண சபைக்கு கிடைத்த நிதியில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், அரச உத்தியோகத்தர்களின் கடமை தவறியமை குறித்தும் கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் உரிய முறைப்பாடுகளை ஆதாரங்களுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கீர்த்தி சிங்க தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** இன்று சவால்களை சந்திக்க நேரிடலாம். அமைதியை கடைபிடித்தல் நள்ளது.

**ரிஷபம்** இன்று சாதாரன வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

**மிதுனம்** இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும்.

**கடகம்** இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விடயத்தையும் இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**சிம்மம்** இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

**கன்னி** கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம்.

**துலாம்** இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும்.

**விருச்சிகம்** இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும்.

**தனுசு** இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும்.

**மகரம்** இன்று உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்** இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

**மீனம்** இன்று முக்கிய முயற்சிகள் சிறந்த பலன்களை அளிக்காது.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 01:55 வரை பஞ்சமி பின்பு சஷ்டி.

**நட்சத்திரம்:** இன்று காலை 05:07 வரை ஆயில்யம் பின்பு மகம்.

**யோகம்:** மரண

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** பூராடம்

**சூலம்:** மேற்கு.

**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

**எமகண்டம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

# ஜமைக்காவில் பல்பொருள் அங்காடியில் துப்பாக்கிச் சூடு - தமிழக இளைஞன் பலி



ஜமைக்கா நாட்டில் உள்ள பல்பொருள் அங்காடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

ஜமைக்கா நாட்டில், பிராவிடன்ஸ் தீவில் உள்ள பல்பொருள் அங்காடியில் பணியாற்றிய விக்னேஷ் என்ற இளைஞரே இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார். பல்பொருள் அங்காடியில் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பணத்தை கொள்ளையடித்துச் சென்ற போது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் விக்னேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் அந்நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த விக்னேஷின் உடலை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று அவரது பெற்றோர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயனிடம் மனு அளித்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.




புதிய வானம் மக்கள் அறக்கட்டளை மற்றும் கிறீன் செனல் கல்வி நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த, சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் இலங்கையின் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரான நடராஜா ராமலிங்கம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். படத்தில் திருக்கேஸ் செல்லசாமி, ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன், அறக்கட்டளை நிறுவுனர் திருமதி தனலட்சுமி மாதவன் மற்றும் கனடாவைச் சேர்ந்த சமூக சேவகர் டாக்டர் நரேந்திரா விவேகானந்தன் ஆகியோர் மத்தியில் விருது பெற்ற ராமலிங்கம்.

# இந்திய மீனவர்கள் 14 பேர் விடுதலை

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த டிசம்பர் 5ஆம் திகதி எல்லை தாண்டி வந்து கடற்றொழில் செய்ததால் கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று(19) விடுதலை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம், மீனவர்கள் தலா 50,000 ரூபாய் தண்டப் பணமாக செலுத்த வேண்டும் என உத்தரவிட்டதுடன் அவர்களை எச்சரித்து விடுதலை செய்தது.

## குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி 25 ஆண்டுகள் நிறைவு:

# புற்றுநோய் வைத்தியசாலையில் சந்திரிக்கா மருந்துகள் அன்பளிப்பு



1999 டிசம்பரில் தம்மை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் 25வது ஆண்டை நினைவுகூரும் வகையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்துகளை அன்பளிப்பாக வழங்கினார்.

குண்டுவெடிப்பில் இறந்த தனது பாதுகாப்பு அதிகாரியின் குடும்ப உறுப்பினர்களும் தன்னுடன் வந்ததாக முன்னாள் ஜனாதிபதி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் டொக்டர் லங்கா ஜயசூரிய ஆகியோரால் நடத்தப்படும் 'இந்திரா புற்றுநோய் அறக்கட்டளைக்கு' இந்த மருந்து நன்கொடை வழங்கப்பட்டதாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்தார். "அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலை நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மதிப்புமிக்க சேவைகளை வழங்குகிறது. இது சுவையான உணவு மற்றும் பானங்கள், பொம்மைகள் மற்றும் கல்வி உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது அத்துடன் பஸ் கட்டணத்தை செலுத்த முடியாத மக்களுக்கும் உதவுகிறது, என அவர் கூறினார். நன்கொடைகள் மூலம் மற்றவர்களுக்கு உதவ விரும்பும் எவருக்கும் இந்த வைத்தியசாலை மிகவும் மதிப்புமிக்க மற்றும் பொருத்தமான இடமாகும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பஸிலை நாடு கடத்த வேண்டும்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

பஸில் ராஜபக்ச என்பவர் கொள்ளைக்காரன். எனவே, அவரை நாடு கடத்துமாறுகோரி அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு கடிதம் எழுதவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "பஸில் ராஜபக்ச எனது உறவு முறை பெண்ணையே மணம் முடித்துள்ளார். இருந்தாலும் அவர் ஊழல்வாதி, கொள்ளைக்காரன். எனவே, அந்த கள்ளனை நாடு கடத்துமாறு அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்புக்கு கடிதம் எழுதவுள்ளேன்.

பஸில் ஊழல்வாதி என்பதற்குரிய சான்றுகள் என்வசம் உள்ளன. உதயங்க வீரதுங்கவுக்கும் அமெரிக்கா தடை விதித்துள்ளது." என்றார்.

# நடுவானில் விமானத்தில் பாலியல் சேட்டை இலங்கை பயணி மீது குற்றச்சாட்டு



விமானத்தில் பாலியல் சேட்டையில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டில், இலங்கையைச் சேர்ந்த ஒருவர் நேற்று (19) அவுஸ்திரேலியாவின் பிராட்மெடோஸ் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

குறித்த நபருக்கு பிணை வழங்கிய நீதிமன்றம் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இலங்கையிலிருந்து மெல்பேர்ன் சென்ற விமானத்தில் நேற்று முன்தினம்(18) ஒரு பெண் பயணியிடம் அநாகரீகமான செயலைச் செய்ததாக 41 வயதான அந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸார் (AFP) இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண், விமான ஊழியர்களுக்கு தகவல் அளித்த பின்னர் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விமானம் மெல்போர்ன் விமான நிலையத்தை அடைந்ததும் பயணிகள் மற்றும் விமான ஊழியர்களிடம் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை நடத்தியிருந்தனர்.

விமானப் போக்குவரத்து சட்டத்துக்கு மாறாக, ஒரு அநாகரீகமான செயலில் ஈடுபட்ட குற்றச்சாட்டு சந்தேகநபர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றத்திற்கு அதிகபட்சமாக 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டதுடன் ஜனவரி 9ம் திகதி மெல்பேர்ன் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான பயண அனுபவத்துக்கான உரிமை உண்டு. அவுஸ்திரேலிய பயணங்களின் போது விமானத்தில் பயணிக்கும்போதும், அவுஸ்திரேலிய சட்டத்தின்படி மக்கள் கட்டுப்படுகிறார்கள். மேலும் யாராவது ஒரு குற்றச் செயலைச் செய்ததற்கான சான்றுகள் இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்" என்று AF அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



அரிசியை இறக்குமதி செய்ய வழங்கிய கால அவகாசம் இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து இந்தியாவிலிருந்து 70ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்ததுடன், அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இதுவரை 22ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன், அரசாங்கம் 5500 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் அரிசி சில கட்டங்களாக நாட்டுக்கு கொண்டுவரப்பட உள்ளது. இந்த நிலையில், இன்று வெள்ளிக்கிழமையுடன் அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைய உள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ, கால அவகாசம் நிறைவடைவது குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டை இன்று வெள்ளிக்கிழமை வெளிப்படுத்தும் என்றார்.

ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# இரு சக்கர அரசியலுக்குள் சிக்குமா இலங்கை...?

பிராந்திய வல்லரசுகளின் போட்டிக்குள் மிதமான ஒரு போக்கை கடைப்பிடிக்கும் கட்டத்துக்கு அரசாங்கம் உட்பட நேர்ந்துள்ளது. எழுபது வருடங்களாக நாட்டில் நிலவிய முதலாளித்துவ ஆட்சி முறை தோற்கடிக்கப்பட்டுள்ள சூழலிது. இதனால், ஆட்சியிலுள்ள அரசாங்கம், சீனாவின் செல்வாக்குக்குள் உட்படும் என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், இந்தியாவையும் அரவணைத்துச் செல்லும் தேவையில், அரசாங்கம் செயற்படும் நிலையே தென்படுகிறது. இரு நாடுகளையும் நேரடியாகத் தாக்கும் சில விடயங்களே இதற்குக் காரணமாகும்.

மீனவர் பிரச்சினை மற்றும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் என்பவை இவற்றில் பிரதானமானவை.

இராஜதந்திர முறுகலை ஏற்படுத்தும் அளவில், இப்பிரச்சினைகள் இல்லாவிடினும் உறவுகளை உரசிப் பார்க்கும் விடயங்களாக இவை, அடிக்கடி மாறுவதுண்டு.

தென்னிலங்கையில் இந்திய எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்துமளவுக்கு மாகாண சபை முறைகள் இருந்தன. நாட்டைப் பிரிக்கும் வெளிநாட்டின் தலையீடாகவே சிங்கள மக்கள் இதைக் கருதினர். ஒரு காலத்தில், இந்தியாவை கடுமையாக ஜே.வி.பி. எதிர்த்ததும் இதற்காகத்தான். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர்தான், அயல்வீட்டாரின் மகிமை புரிவது போல் தெரிகிறது.

இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இலங்கை மண்ணில், இடமளிக்கப்படாது என்று கூறுமளவுக்கு இந்தியாவின் அவசியத்தை ஜனாதிபதி புரிந்துள்ளார். இதற்குப் பின்னராவது நாட்டின் துறைமுகங்களுக்குள் இந்தியாவுக்கு எதிரான ஆராய்ச்சிக் கப்பல்கள் அனுமதிக்கப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய இந்தக் கேள்விக்கு அமைச்சர் விஜித ஹேரத் வழங்கிய பதில், எமது நாடு இருமுனைப் பலத்துக்குள் சிக்குவதை தவிர்க்க முடியாது என்பதையே துல்லியப்படுத்தியது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர், பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை, அதே தினத்தில் சீனாவின் உயர்மட்ட பிரதிநிதிகளையும் ஜனாதிபதியைச் சந்திக்கத் தூண்டியிருக்கிறது. இவை எல்லாம், இருமுனைப் போட்டிக்குள் இலங்கையின் நகர்வை தீர்மானிக்க வேண்டிய தருணத்தையே வெளிக்காட்டி நிற்கின்றன. பொருளாதாரப் படுகுழியில் வீழ்ந்து தவித்த நேரத்தில் 04 பில்லியன் டொலர் தந்துதவிய நாடு இந்தியா.

பௌத்தத்தின் பிறப்பிடம் இந்தியாதான். ஜே.வி.பியின் அரசியல் சித்தாந்தம் சீனா சார்ந்ததாக இருக்கலாம். அரசியலை விடவும் ஆசியாவில் ஆதிக்கம் செலுத்துவது மதம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இதனால்தான், கலாசார உறவுகளுடன் கட்டுண்டவாறு அரசியலையும் இணைத்துச் செல்ல நினைக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். இந்தியாவை நெருங்க முனையும் இந்த அரசாங்கத்தை சீனாவும் அவதானிக்காமலில்லை.

இராணுவ, பொருளாதார பிராந்திய வகிபாகங்களில் இந்தியாவும் சீனாவும் ஒரு வண்டியின் இரட்டைச் சக்கரங்கள். இலங்கை போன்ற இந்து சமுத்திர நாடுகளுக்கு இவ்விரண்டு நாடுகளும் அவசியம் என்பது யதார்த்தமான உண்மை. தனித்து நின்று ஒரு பக்கம் நிற்கும் நிலையில் நமது நாடு இல்லை. வீழ்ந்துள்ள பொருளாதாரம் நிமிர்த்தப்பட்டுள்ள சூழலில், இந்தியாவின் உறவு அவசியமானதே. 12.5 பில்லியன் டொலர் கடனில் 11.5 பில்லியன் டொலர் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இக்கடன்கள் 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலங்களில் இக்கடன் பெறப்பட்டுள்ளதென்றால், அரச செலவினத்தின் உச்ச எல்லையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இதனால்தான், உச்ச அளவில் செலவுகளைக் குறைத்து பணவீக்கத்தை கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் முயல்கிறது. இதற்கு வெளிநாட்டுக்கடன்களை விடவும் வெளிநாட்டு நன்கொடைகளே அவசியம். 2028 இல், 15.1 பில்லியன் டொலர் சேமிப்பாக மீதப்படுத்தப்படும் என, ஜனாதிபதி கூறியிருப்பது, பொருளாதாரம் ஸ்திரத்தை எட்டியுள்ளதையே காட்டுகிறது.

டொலரின் வெளிப்பாய்ச்சலைக் கண்காணித்தவாறு வாகனங்களை இறக்குமதி செய்ய, அடுத்த ஆண்டு அனுமதிக்கப்பட உள்ளது. ஒரு இலட்சம் ரூபாவுக்கு விதிக்கப்பட்டிருந்த உழைக்கும்போதான வரி, தற்போது ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா என, உயர்த்தப்பட்டுள்ளது. இது, சாதாரண வருமானமுள்ளோரைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையே. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள், அடிக்கடி எழும் சில்லறைப் பிரச்சினைகளின் கவனத்தை திசை திருப்புவதாக விமர்சனங்கள் எழுகின்றன.

தேங்காய் மற்றும் அரிசித் தட்டுப்பாடுகளின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்கு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புச் செலவுகள் காட்சிப்படுத்தப்பட்டதாகவும் அரசாங்கத்துக்கு எதிரான சக்திகள் விமர்சிக்கின்றன. ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட தகவல்களும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தின. ஆனால், கோடிக்கணக்கான மக்களின் நிதி அரசியல் பலத்தால், வீணடிக்கப்பட்டுள்ளதை ஏற்க எவரும் தயாரில்லை. முதலாளித்துவ அரசுகளின் போக்குகளே இப்படித்தான்.

பட்டினியால் மக்கள் உயிரிழந்தாலும், அவர்களின் அவயங்களை விற்றுப் பணம் தேடும் பிழைப்பு முதலாளித்துவத்துடன் ஒட்டியே பிறந்துள்ளது. இதை, வெளிக்கொண்டுவருவது படிப்பினைக்காகவே தவிர, பழிவாங்குவதற்கு இல்லை. வியர்வை சிந்தி உழைக்கும் மக்களுக்கு வரி விதிக்கும் முதலாளித்துவம், பணத்தை சுரண்டும் பிழைப்புவாதிகளைக் கண்டுகொள்வதில்லை.

இவ்வாறிருக்க, முன்னாள் ஜனாதிபதிகள், ஓய்வு பெற்ற அரசியல்வாதிகள், முன்னாள் எம்பிக்கள். இவர்களுக்கெல்லாம் கடுமையான பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்றன. இவர்களுக்காக, பாதுகாப்பு என்ற ரீதியில், மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது. தேவை கருதிய செலவாக இதனை கருத முடியவில்லை. இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கி விட்டார்கள்.

மக்களின் ஆதரவுடன் நடைபோடும் இந்த அரசு, வாக்குறுதிகளை நிறைவேற்றி, சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.





## சொந்த முயற்சியில் சாதிக்கத் துடிக்கும்

# இளைஞர்களுக்கு வழிகாட்டும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

தொழிற்துறை பயிற்சியில் புரட்சி செய்யும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் புதியன தேடும் புத்தாக்கத்தை வரவேற்கும் புதின யுகத்தில் 'மாற்றம்' நிறைந்த நிகழ்காலம் மறுக்கப்பட முடியாத பல எதிர்ப்பார்ப்புகளை சுமந்து நகர்ந்துக்கொண்டிருக்கின்றது.

அவ்வாறான பல்வேறு எதிர்ப்பார்ப்புக்களுடன் வழமான எதிர்காலத்தை நோக்கி நகரும் நிகழ்காலம் நாட்டின் அபிவிருத்தியில் மற்றுமின்றி சர்வதேசத்துடன் ஒன்றித்து பயணிக்கும் விதத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மீதான கவனம் வெகுவாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

ஒருநாட்டின் அபிவிருத்தியில் ஆள் வீத வருமானத்தைப்போலவே அன்னிய செலாவனியும் முக்கிய செல்வாக்கினை செலுத்தும் என்பதில் ஐயமில்லை.எனவே அதற்கான சரியான அடித்தளத்தை உருவாக்குவதன் மூலம் அவ் அடைவு மட்டங்களை முறையாக அனுகிச்செல்ல இலக்கு வைக்கும் பொருத்தமான வயதுப்பிரிவினராக இளம் பராயத்தினரைக் குறிப்பிடலாம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்கள் இன்றிமையாத பிரிவினராகின்றனர்.அவ்வாறு பெறுமதி மிகு இளைஞர்களின் திறமைகளை இனம் கண்டு அவற்றை விருத்திசெய்து தலைமைத்துவ பண்பினை மேம்படுத்த வேண்டியது அவ்வவ் காலக்கட்டங்களின் அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகின்றது.

இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்த ஆரம்பிக்கப்பட்ட அரச நிறுவனமான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 14 நோக்கங்களில் இளைஞர்களின் ஆற்றல்களை இனம் கண்டு ஊக்குவித்தல் எனும் நோக்கத்திற்கமைய நாடளாவிய ரீதியில் பல்வேறு தொழிற்பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக நாடுமுழுவதும் 2006 ஆம் ஆண்டளவில் 33 பயிற்சி நிலையங்களுடன் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தற்போது 56 தொழிற்பயிற்சி மத்திய நிலையங்களை நிறுவியுள்ளன. 2025 ஆண்டில் இதனை 65 ஆக உயர்த்த மேலும் 09 பயிற்சி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுவும் தொழிற்பயிற்சித்துறையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வளர்ச்சிப்பாதையில் முக்கிய அம்சம் எனலாம்.

இப்பயிற்சி நிலையங்களின் மூலம் தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்யும் சுமார் 20,000க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளை தொழில் உலகிற்கு ஒவ்வொரு வருடமும் அனுப்பிவைக்கின்றது. இவற்றில் நாடு முழுவதிலும் சுமார் 300க்கும் மேற்பட்ட பாட நெறிகளை பயில்வதற்கான வாய்ப்புகளை பெறுகின்றனர்.

NVQ (தேசிய தொழிற்தகமை) தர சான்றிதழ்களுக்கான பாடத்திட்டங்கள், NVQ அல்லாத பாடத்திட்டங்கள் என இவை வகுக்கப்பட்டுள்ளதுடன் இவற்றில் தகவல் தொழிநுட்பம், நுண்கலை, மொழி, விவசாய தொழிநுட்பம், அழகுக்கலை, வாகன தொழிநுட்பம், ஊடக தொழிநுட்பம், விளையாட்டு, ஹோட்டல் தொழிற்துறை, இலத்திரனியல் என பல்வேறு துறைகளில் உலக தொழிற் சந்தையின் கேள்வித்தன்மைக்கு ஏற்றவகையில் பாடத்திட்டங்கள் தொழிற்பயிற்சி அதிகார சபையின் அங்கிகாரமுடையதாக உருவாக்கி கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பாடநெறிகளை கற்று தேர்ந்தவர்களுக்கான சான்றிதழ்களை சிறப்பான முறையில் வழங்கி வைக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒவ்வொரு வருடமும் தவறுவதில்லை.

இம்முறை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மேல்மாகாணத்தின் தொழில்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பாட நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 15 ஆம் திகதி அன்று நடைபெற்றது. இவ்விழாவின் போது 10 பயிற்சி மத்திய நிலையங்களின் 1220 மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு தொழிலுலகுக்கு தகுதியுடையவர்களாக தங்களை உயர்த்திக்கொண்டனர்.

இதன்போது NVQ தரம் 4,5 மற்றும் 06 ஆகியவற்றுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சிந்தக ஹேவாபத்திரனவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில்குமார கமகே கலந்துக்கொண்டதுடன் விசேட அதிதிகளாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டின் ஏனையத்துறைகளைப் போலவே தொழிற்பயிற்சித்துறையிலும் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி சிந்திக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அரசாங்க தொழிலுக்காக போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்தும் யுகத்திலிருந்து மீண்டு முயற்சியான்மையுடன் சொந்தக்காலில் நின்று சாதிக்க துடிக்கும் இளைஞர்களுக்கும், நிபுணத்துவம் வாய்ந்த தொழிற்துறை வல்லுனர்களாக மிளிரத் துடிக்கும் இளைஞர்களுக்கு சரியான வழியினை காட்டி உறுதியான அடித்தாளமிட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் எப்பொழுதும் துணை நிற்பதற்கு இவையும் சான்று பகிர்கின்றன. ■



**உள்நாட்டில் தொழிற்துறையில் பிரவேசிக்க காத்திருப்போருக்கும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்பை பெற்றுக்பெற்றுக்கொள்வதற்கும் இளைஞர்களுக்கு இருக்கும் ஒரு வரப்பிரசாதம்**





**நாடுமுழுவதும் 56 தொழிற்பயிற்சி நிலையங்களில் 300க்கும் மேற்பட்ட பாட நெறிகளை பயில வாய்ப்பு**





முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டு பயணிகள் சுமார் 100 பேர் அடங்கிய நாட்டுப்படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப்பகுதியில் மியன்மாரில் இருந்து சுமார் 100 ற்கு மேற்பட்ட பயணிகளுடன் நாட்டுப் படகு ஒன்று திசைமாறி வந்துள்ளது.
(படங்கள் : சண்முகம் தவசீலன், சதீஸ்)

# எலிக்காய்ச்சல் விலங்குகளுக்கும் ஏற்படக் கூடிய அபாயம்; செல்லப்பிராணிகளால் மனிதர்களுக்கும் பரவக் கூடும்

## வடக்கு மாகாண கால்நடை சுகாதார பணிப்பாளர்




வடக்கு மாகாணத்தில் தற்போது பரவியுள்ள எலிக்காய்ச்சல் நோயானது மனிதர்கள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கும் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

இந்நோயானது நாய்களையும் தாக்க வல்லது என்பதால் வளர்ப்பு மற்றும் கட்டாக்காலி நாய்களின் சிறுநீர் மற்றும் மலம் என்பன மனிதரில் தொற்றுக்களை ஏற்படுத்தக்கூடியவை என்பதை நினைவிற் கொள்ளல் அவசியம்.

நாய்களில் இந்நோய் ஏற்படாது தடுப்பதற்கான தடுப்பூசிகள் இலங்கையிலும் சகல பிரதேசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

எலிக்காய்ச்சல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு திருநெல்வேலியில் உள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

இந்நோயானது லெப்றரோஸ்பைரா எனப்படும் ஒரு வகை பக்றீரியாவினால் ஏற்படுத்தப்படுகின்ற தொற்று நோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் சிறுநீரில் இப்பக்றீரியாக்கள் வாழும். எலியின் சிறுநீர் மற்றும் மலம் மூலம் வெளியேறும். இப் பக்றீரியாவானது மழைக் காலங்களில் மழைநீர் மற்றும் வெள்ளத்தில் கலந்து அயற்புறங்களுக்கு பரவும். மழைக் காலங்களில் குடிநீர்க்கிணறுகளில் கூட தொற்றுக்கிருமிகள் கலக்கக்கூடும். தொற்றடைந்த நீரைப் பருகுவதாலோ அன்றி காயமுற்ற தோல், கண், வாய் போன்ற பகுதிகளில் தொடுகை உறும் வேளைகளில் இப் பக்றீரியா உடலுள் ஊடுருவிச் செல்லும் வாய்ப்புள்ளது.

இதுவே எமது உடலில் எலிக்காய்ச்சல் பரவ பிரதான காரணமாக உள்ளன. இதே பக்றீரியாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற வளர்ப்பு மிருகங்களில் கூட இந்நோயினை ஏற்படுத்திவிடவும் வாய்ப்புக்கள் உண்டு. இவ்விலங்குகளின் மலம், சிறுநீர் போன்ற கழிவுகளில் இந் நோய்க்கிருமி வெளியேறி இவ்விலங்குகள் வாழும் சூழலில் நெருங்கிப் பழகும் மனிதனிலும் இந் நோய்க்கிருமி பரவி நோய்ப்பாதிப்பை ஏற்படுத்தலாம்.

மனிதனின் குருதியில் நோய்கிருமிகள் உள்ளதை இரத்தப் பரிசோதனைகள் மேற்கொண்டு உறுதிப்படுத்துவதைப் போலவே வளர்ப்பு விலங்குகளின் குருதி, சிறுநீர் ஆகியவற்றை ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தி நோய்க்கிருமியின் பிரசன்னத்தை உறுதிப்படுத்த முடியும்.

மேலும் வடக்கு மாகாணத்தின் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் அண்மைக்காலத்தில் மனிதரில் அடையாளம் காணப்பட்ட இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வளர்ப்பு விலங்குகளில் இந்நோயின் கிருமிகள் தொற்றாது.

பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டு உரியச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாடுகளில் நேரடியாக இணைந்து கொள்ளும் பொருட்டு நேற்று முன்தினம் மத்திய கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நோய் ஆராய்ச்சி நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

பல்வேறு பகுதி பண்ணை விலங்குகளின் குருதி மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# வன்னியில் யானை - மனித மோதலை தடுக்கவும்

## ப.சத்தியலிங்கம் எம்.பி வலியுறுத்தல்

**கி.வசந்தன்**

வன்னிப் பகுதியில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் அதிகரித்து இடம்பெறும் யானை– மனித மோதல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனப் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (18) உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில்,

பொருளாதாரத்தில் வவுனியா மாவட்டம் ஏனைய மாவட்டங்களைப் போலவே, விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. இங்கு வாழும் விவசாயிகள் யானைகளின் தொல்லையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். கடந்த மாதம் எமது மாவட்டத்தில் மாத்திரம் 11 பேர் யானைத்தாக்குதலுக்கு உள்ளாகி இறந்திருக்கின்றார்கள். ஆகவே எமது பகுதிகளுக்கு யானை வேலி அமைப்பதற்கான நிதியினை அரசாங்கம் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

கீழ் மல்வத்து ஓயா திட்டம் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த திட்ட முன்மொழிவில் யானை – மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கீழ் மல்வத்தோயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் திட்டப் பிரதேசத்திலிருந்து யானைகள் ஏனைய பிரதேசங்களிற்கு இடம்பெயரவேண்டிய சூழல் ஏற்படும் என்பதால் தற்போதுள்ள யானை–மனித மோதல் நிலைமையானது மிக மோசமடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரையில் இவ்விடயம் தொடர்பில் அரசினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

# வீடுடைத்து திருடியவர்களுக்கு விளக்கமறியல்

**பு.கஜிந்தன்**

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் வீடுடைத்து தளபாடப் பொருட்கள் பலவற்றைத் திருடிய சந்தேக நபர்கள் இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வீடுகளை உடைத்துத் திருடியதாகக் கடந்த 16ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இரண்டு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, இரண்டு சந்தேக நபர்களை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.




# யுத்தத்தை விழுங்கும் சினிமா

மாறிவரும் நவீன யுகத்தில் எல்லா விடயங்களும் தனக்கான புதுமைகளுடன் வெளிப்பட்டு நிற்பதினை நாம் அவதானிக்க முடியும். கலைத்துவ வளர்ச்சியின் முன்னோட்டமாகவும், அதனை வர்த்தகப் படுத்திகின்ற விடயத்தில் மிக உச்சமானதுமான நிலையினை திரைப்படங்கள் கொண்டிருப்பதினை நாம் அவதானிக்கலாம். கதை கூறுதல் எனும் விடயத்தின் துரிதகட்ட வளர்ச்சியின் விளைவே சினிமாவாகும். ஒரு வரலாற்றினை வாய்மொழியாகக் கூறி மக்களின் உணர்வுகளைப் பரிசீலிப்பதினை விட காட்சியல் ரீதியாக அவ்வரலாறுகள் கூறப்படும் போது மக்களின் உணர்வு வெளிப்பாட்டினை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு திரைப்படத்தினுடைய அங்கீகாரம் என்பது அத்திரைப்படம் கொண்டிருக்கும் அற்புதங்களைப் புரிந்து கொள்வதுதான். எப்பொழுதும் சினிமாவானது பல் வகையான அற்புதங்களைக் கொண்டிருக்கும். கதை கூறுவது என்றாலும், காட்சியமைப்பு என்றாலும், இவற்றின் தன்மைக்கு ஏற்ப ரசனைப் பெருக்கினை கவனத்தில் கொண்டு உருவாக்கப்படும் திரைப்படங்களே அற்புதம் எனும் கட்டமைப்பினைச் சென்றடையும். சினிமா பற்றிய வரைவிலக்கணங்களைக் கூறும் போது அவை வழமையான போக்கினையே கொண்டிருக்கும். இது எல்லா வகையான திரைப்படங்களுக்குப் பொருந்தினாலும் அத்திரைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் விதமும், கதை சொல்லப்பட்டிருக்கும் அழகியலும் வழமையான சினிமா ரசனையிலிருந்து எம்மை மாற்றி புதிய வகை படைப்பாக எம் கண்களுக்கு புலப்படுவதினை அவதானிக்க முடியும். இதுவே ஒரு படைப்பின் பேசு பொருளினை விரிவாக்குகிறது எனலாம்.

ஒரு சினிமாவில் கதை சொல்லப்பட்டிருக்கும் விதமானது வழமையான கதை சொல்லலாக இருந்தாலும் அதனை புதுமையான முறையில் சொல்கின்ற போது அது மக்களை வெகு விரைவில் சென்றடைந்து பேசு பொருளினை உருவாக்கும். அதே போன்று ஒரு சினிமாவின் காட்சியமைப்பானது வழமையான காட்சியமைப்பாக அல்லாமல் மக்களிடம் புதிய பரிணாமத்துடன் சென்றடைகின்ற காட்சியமைப்பாக இருக்குமானால் அத்திரைப்படம் காத்திரமான பேசு பொருளினை உருவாக்கும் என்பதினை நாம் புரிந்து கொள்ளலாம். இவ்வாறாக ஒன்றுக்கொன்றிலிருந்து மாறுபடும் படைப்புக்களே வெற்றியின் பக்கம் செல்லும் வழமையான போக்கிலிருந்து மாறுபடாமல் உருவாக்கப்படும் படைப்புக்கள் தோல்வியினை சந்திக்க நேரிடும் என்பது சினிமா உலகம் கற்றுத் தரும் பாடமாகும்.

இவ்வகையில் 2012 ம் வரும் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட திரைப்படம் தான் Act of Valor இத்திரைப்படம் வெளிவந்த ஆரம்ப கட்டத்தில் மக்கள் மத்தியில் எந்த எதிர்பார்ப்புகளும் இருக்கவில்லை. மரபு ரீதியான யுத்தத் திரைப்படம் என்றே நினைத்தார்கள். ஆனாலும் விசித்திரமான கதையமைப்பினைக் கொண்டு பயங்கரவாதத்தின் மற்றொரு முகத்தினை இப்படம் காட்டிற்று. நாவலினை அடிப்படையாக வைத்தே இத்திரைப்படம் உருவாக்கப்பட்டதாக சினிமா விமர்சகர்கள் கூறுகின்றனர். படம் தொடங்குவதற்கு முன்னர், இதுவொரு உண்மைச் சம்பவம் என ஒரு குரல் ஒலிக்கத் தொடங்குகிறது.

யுத்தங்களால் நிரம்பிய இவ்வுலகம் எப்படி இருக்கும் என்பதினையும், மனிதர்களுக்கும், இயந்திரங்களுக்குமிடையிலான போராட்டங்கள் எவ்வாறு நடக்கும் என்பதினையும் விசித்திரமான காட்சிகளின் மூலம் படமாக்கியிருக்கிறார் இயக்குனர். யுத்த முனைக் கதைகளுக்கு முன்னோடியாக விளங்கும் இத்திரைப்படம் எதிர்கால அமெரிக்காவினையும், பயங்கரவாதமற்ற நகரம் பற்றிய விசித்திரமான ஒளியமைப்பினை கொண்ட காட்சிகளையும் உள்ளடக்கியிருக்கிறது. நவீனமயப்படுத்தப்படும் உலகில் மனிதனானவன் எவ்வகையான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதினை அழகிய முறையில் வெளிப்படுத்திய Act of Valor காத்திரமான சினிமா வகைப்பாட்டிற்குல் இலகுவாகக் புகுந்து விடக் கூடியது. இதுவே ஒரு சினிமா கற்றுத்தரும் சிறந்த பாடமாகும்.

இதிலிருந்து நாம் நோக்குகின்ற போது ஆரம்பத்தில் மாமூலான கண்ணோட்டத்துடனும் பிறகு புதினமான மாற்றங்களை விரும்பிய படைப்பாக இத்திரைப்படம் மக்கள் மனம் கவர்ந்தது. மக்களின் ரசனையினை இரண்டாவது தடவையாக புரிந்து கொண்டு தோல்வியில் சோர்வடையாமல் அடுத்த கட்ட முயற்சியினை மேற் கொண்டு மக்களின் ரசனையினைப் புரிந்து வெற்றிப் படைப்பாக மாற்றிய Act of Valor ஒரு நவீன சினிமாவின் உத்தி எனலாம்.

# கிராமியத்தின் மணம்



நாங்கள் விரும்பும் போதெல்லாம் எங்களை வடிவமைத்துக் கொள்கிறோம். வடிவமைப்பிற்கு ஏற்றபடி வாழவும் பழகிக் கொள்கிறோம். இதுவே எங்கள் விதியாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. எங்கள் கிராமத்தின் வாசனை காற்றெங்கும் பரவி பெரும் கலவரத்ததை தோற்றுவித்தது. அவை எப்படிப்பட்ட கலவரம் தெரியுமா? காற்றோடு கலந்த பேரிசை போல மீளவே முடியாத கலவரம் போன்றதுதான். ஒரு கிராமம் பேசுகின்ற சங்கதி பார்வையாளர்களின் மனதினை இலகுவில் வசீகரித்து விடுகின்றது. அவை சொல்கின்ற கதையில் மக்கள் லயித்துப் போகின்றனர். இதனால் கிராமத்தின் கதைகள் என்பது அனைவரையும் கவரக்கூடிய ஒரு முக்கிய சாதனமாக பார்க்கப்படுகின்றது. அதனை நாடி அனைவரும் செல்கின்றனர், விமர்சனங்களை முன்வைக்கின்றனர், அதன் பாடு பொருள் பற்றிக் கதையாடுகின்றனர். இதுவே மிக உயர்ந்த வளர்ச்சிக்கு கதையினைக் கொண்டு சென்றிருக்கிறது. சில கதைகள் உலகிற்கு மிகப் புதுமையான விடயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கின்றன. சில கதைகள் புகழ் மிக்க நபர்களை உருவாக்கியிருக்கின்றன, சில கதைகள் வரலாற்று அடையாளங்களை பிரதிபலித்திருக்கின்றன, சில கதைகள் யதார்த்தங்களை மீறி உருவாகியிருக்கின்றன.

இதிலிருந்து கதை என்பது ஒரு குறிப்பிட்ட பரப்பினை மையமாகக் கொண்டு இயங்குவதல்ல, மாறாக உலகியல் நடத்ததையின் மீதான அனைத்துப் பார்வைகளையும், உலகியலினை மீறிய பிரமிப்புக்களையும் தன் வசம் புதைத்து வைக்காமல் வழியெங்கிலும் பரப்பிவிடுகின்ற அற்புதமான ஒளியே கதையாகும். உயிரோட்டமான கதை என்பது வாழ்வின் மிக நுணுக்கமான பகுதிகளை வெளிப்படுத்துவதே. இவ்வாறான வெளிப்பாடுகள் வழிப்போக்கர்களின் மனதினில் நீங்காத இடத்தினை வகிக்கின்றபோது அதுவே ஒரு சிறந்த கதைக்கான அங்கீகாரத்தினை வழங்குகின்றது. கதைகளை எப்படியான அடிப்படையில் மனிதன் நுகர்கிறான் என்பது இன்னும் நிரூபிக்கப்படாத உண்மையாகவே இருக்கிறது. இப்படி கதை பற்றியான கதைகளை எங்கள் கிரமத்திற்கு வரும் வழிப்போக்கர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

இன்று எமது கண்களில் தவழுகின்ற பல வரலாற்று கிராமங்களின் பின்புலத்தினை நோக்குகின்ற போது அவற்றுல் பொதிந்திருக்கின்ற பல அதிர்ச்சிகரமான சம்பவங்களை எம்மால் உணரமுடியும். அக் கிராமத்திற்கு பின்னால் இருக்கின்ற வலியினையும், அக் கிராமத்திற்காக அவர்கள் அனுபவித்த சொல்லொனாத் துயரங்களையும், சுமைகளையும் அவன் அறிவானேயானால் ஒரு கிராமத்தானின் மனோ நிலையினைப் புரிந்து கொள்ளலாம். அது மட்டுமில்லாமல் ஒரு கிராமம் சுமந்து வருகின்ற துயரம் அக் கிராமத்தானைத் தவிர யாரும் உணருவதில்லை. மேலும் முக்கியமான விடயம் அந்த கிராமத்தின் பயன் பற்றிய அறிதல் என்பது அங்கு வாழும் மக்களுக்கு மிகப் பொருத்தமானதும், மிக முக்கியமானதாகும். வரலாற்று கிராமங்களைப் பொருத்த வரை மிக அவதானமாகவும், சீரிய கரிசனையுடனும் கையாள முற்படுதல் மிகக் கட்டாயமானதாகிறது. அதன் மூலம் எடுக்கப்படுகின்ற குறிப்புகள் இன்னுமொரு நூற்றாண்டினை நோக்கிய வரலாற்றின் புதுத் தன்மையினைப் பேச முனைகின்ற செயற்பாட்டினை நகர்த்திச் செல்ல முற்படும் பெரும் தேர் என்பதினை நாம் மறத்தலாகாது. இப்படி கதை பற்றியான கதைகளை எங்கள் கிரமத்திற்கு வரும் வழிப்போக்கர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

இவ்வாறாக இன்று காணப்படும் அவனது கிராமங்கள் மிக முக்கிய ஆவணமாக பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு செயல்திட்டமாகும். சமூகத்தின் சட்ட திட்டங்கள், மரபுகள், வழக்காறுகள் போன்ற பல மாண்மியமான விடயங்களை கிராமங்கள் பேசுகின்றன. பல கிராமங்கள் சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதினையும் அவற்றின் கட்டங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில் அறிந்து கொள்ளலாம். இன்றையை சூழ் நிலையில் கிராமங்கள் மாத்திரமல்ல எம்மை விட்டு நகர்ந்து சென்ற பல நீண்ட காலத்திற்கு முற்பட்ட நினைவுகள் கூட காலத்தின் நியதியினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவை எம்மைக் கடந்த, எம்முடன் இருக்கின்ற சமூக நியதிகளைப் புரிந்து கொள்வதற்கான மிகச் சிறந்த பொக்கிஷங்களாகும் என்பதினை நாம் விளங்கிக் கொள்ளலாம். இப்படியே கிராம மக்களும் ஜெயம் பெற்றனர். இப்படி கதை பற்றியான கதைகளை எங்கள் கிரமத்திற்கு வரும் வழிப்போக்கர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தாள் அவள். எங்கள் கிராமம் பற்றிய மூன்று குறிப்புகள் அவளிடமிருந்து வெளிவந்தன. அவளோ வழிப்போக்கர்களின் வருகையினை கணக்கிட்டு எங்கள் கிராமியத்தின் மாண்பினை சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒருவன் முத்தாரம்



ஏ.எம். சாஜித் அஹமட்

# கவிதைகளின் மாற்றுலகம் தற்கொலைக்குப் பறக்கும் பனித்துளி

கவிதைகளின் மொழி வழித் தொடர்புகள் உணர்வுகளின் பக்கம் சார்ந்தவையாகும். அவற்றிலும் மொழிபெயர்ப்புக் கவிதைகள் கொண்டியங்குகின்ற அழகியல் நுட்பங்கள் காலத்தின்மேம்போக்கானவை. அவற்றினை நுகர்கின்ற போது கிடைக்கக் கூடிய அனுபவங்கள் பிரிதொரு நாட்டின் மீதான புரிதல் என்றே கூற முடியும். எழுத்துக்கள் என்பது எவ்வகையான நிலைப்பாட்டில் இயங்க வேண்டும் என்பதினை எவராலும் வரையறுக்க முடியாது. இன்று உலக வடிவமைப்பின் கூறுகள் பற்றிய அனைத்து விடயங்களினையும் எழுத்துக்கள் பேச முற்படுகின்றன, வரலாற்றின் மீது காத்திர மான முன்வைப்புக்களை செய்கின்றன, விசித்திரமான மனிதர்கள், விந்தைகள் கலந்த பூமி பற்றியெல்லாம் பேசுகின்ற எழுத்துக்கள் மிக அரிதாயினும் அவை பற்றிய தேடல்கள் எழுத்தின் வடிவமாக அல்லாமல் காட்சி யியல் ரீதியாக எம்மிடம் வந்து சேர்ந்திருப்பதினை நாம் அவதானிக்கலாம். இலக்கியம் யாருக்கு சொந்தமானது எனும் கேள்வி எழுகின்றபோது அதற்கான பதில் காத்திரமான படைப்பாளிகளுக்கு சொந்த மானது என்பதே. இன்றைய கால கட்டத்தின் இலக்கியச் சூழலில் கவிதைகள் கொண்டிருக்கும் பெருத்த இடத்தினை நாம் அறிவோம்.

முகநூல் வாயிலாகவும், இணையத்தளப் பக்கங்களின் ஊடாகவும் இன்று கவிதைகள் பரப்பிவிடப்பட்டிருக்கின்றன. ஆனால் அவ்வாறு பகிரப்படுகின்ற அனைத்துக் கவிதைகளும் காத்திரமானதா? இல்லையா? என்பதினை ஒரு தொடர்ச்சியான வாசகன் புரிந்து கொள்வான். அதிலும் இலக்கியச் சூழலினைப் பொறுத்தவரை ஆண் கவிஞர்களின் வருகையானது கவிதைகள் மீதான ஒரு அதிகாரக் குவியலின் பக்கம் எம்மை அழைத்துச் செல்கிறது. பெண் படைப்பாளிகள் எனும் வகைப்பாட்டினைத் தேடுகின்ற போது விரல் விட்டு எண்ணக் கூடிய சொற்பமான நபர்களே சுற்றி வருகின்றனர்.

பெண் படைப்பாளிகளின் படைப்புக்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்கு முடக்கப்பட்டு கதையாடுவதற்கு இடம் தரப்படாமல் மழுங்கடிக்கப்படுவதினையும் நாம் அவதானிக்கலாம். சமூகத்தின் பார்வையில் பெண் என்பவள் எவ்வாறாக கட்டமைக்கப்பட்டிருக்கிறாள், அவளின் எழுத்துக்கள் எவ்வகையான வாசிப்பினை வேண்டி நிற்கின்றன, என்பதினை காத்திரமாக விமர்சனம் செய்யக் கூடிய ஒரு அமைப்பு எம்மத்தியில் உருவாக வேண்டும். அவ்வாறான ஒரு பரப்பு உருவாகுவதன் மூலமாகவே பெண் படைப்பாளிகளின் படைப்புக்கள் பற்றிய விரிந்த பார்வையினை இலக்கிய உலகம் முழுவதிற்குமாய் பகிரமுடியும்.

அமெரிக்க பெண் கவிஞரான சில்வியா பிளாத்தின் தற்கொலைக்குப் பறக்கும் பனித்துளி தொகுதியானது காத்திரங்கள் நிறைந்த கவிதை உலகின் விசித்திரமாகும். இதனை தமிழில் கீதா சுகுமாரன் மொழிபெயர்த்திருந்தார். வெளிப்பாட்டு யுக்தியிலும், பெண்ணியலைப் பாடுவதிலும் சில்வியா பிளாத்தின் கவிதைகள் தனித்துவம் வாய்ந்ததாகும். பிரதியின் பின் குறிப்பில் சில்வியா பிளாத் பற்றி குறிப்படும் போது மரணித்தல் ஒரு கலை, மற்ற அனைத்தையும் போலவே நான் அதனை மிகச் சிறப்பாக செய்கிறேன். என்று எழுதியவர் கவிஞர் சில்வியா பிளாத். தனிமை, புறக்கணிப்பு, மனப்பிறழ்வு, ஆண் உலகச் சீண்டல் ஆகியவை அவரைத் தற்கொலையின் காதலியாக்கியது. எனினும் மரணத்துள் வாழ்ந்ததன் மூலம் உருவான தனது கவிதைகளில் மரணத்தையே வென்று வாழ்கிறார் அவர் இவ்வாறே காத்திரமான சொற்களின் வழியே சில்வியா பிளாத்தின் கவிதைகள் பேசு பொருளை உருவாக்கின.




இடைவிடாத பெண் குரல் ஒன்று தொடர்ந்த படியே சில்வியா பிளாத்தின் கவிதைகள் எம் முன் பேச முயற்சிக்கினறன. அவை கூறும் நாகரீகத்தின் தொடர்ச்சிகள் ஆணாதிக்கத்தின் மீதும், அது வரையப்பட்டிருக்கும் அதிகார மையத்தின் மீதும் பெரும் கேள்விகளை எழுப்புகின்றன. அப்படியான கேள்விகளுக்கு விடையின்றித் தவிக்கும் பல ஆண்மங்களின் செயற்பாடுகள் பெண்கள் மீதான விடியலின் தொடக்கமாய் இக்கவிதைகள் இருப்பதினை உணர முடியும். பெண் உடல், பெண் வலி, பெண் உருவகிப்பு என பெண்ணிய அடையாளத்தினை முன் நிறுத்தி பல கவிதைகள் இத் தொகுப்பினில் உண்டு. இவரின் கவிதைகள் பற்றி ஸீம்ஸ் ஹீனி குறிப்படும் போது சில்வியா பிளாத்தின் இக்கவிதைகள் தயக்கமற்ற நடையில் கேட்கும் உரிமையைப் பெற்றுக் கொள்கின்றன. நாம் கவிதைகளின் மீது தான் கவனத்தை செலுத்துகிறோமே தவிர கவிஞரின் மீது அல்ல. என்கிறார். இதுவே ஒரு படைப்பாளிக்கு கிடைக்கப் பெருகின்ற பெரும் அங்கீகாரமாகும். அவ் அங்கீகாரம் என்பது, நபரிலன்றி எழுத்துக்களின் கரிசனையில் எழுவதாகும். சில்வியா பிளாத்தின் கவிதைகளும் அவ்வறே இயங்குகின்றன.

## பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு தெரிவு

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ஐ.ஏ. நஜீம் தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய குழுவின் அறிமுகம், முன்னைய குழு உறுப்பினர்களோடு சுமுகமான கலந்துரையாடல், அவர்களுக்கான பிரியாவிடை, எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய கலந்தாய்வு மற்றும் கலந்து கொண்ட அனைவருக்குமான இராப்போசனம் வழங்கல் என்பன இந்நிகழ்வின் சிறப்பம்சங்களாக காணப்பட்டன.

பாடசாலை வரலாற்றில் இடம்பிடித்த இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் உள்ளிட்ட முகாமைத்துவ குழுவினர், புதிய குழுச் செயலாளர் லிபிதி உள்ளிட்ட உறுப்பினர்கள், முன்னைய குழுச் செயலாளர் யூ.டி.பைனூஸ் உட்பட உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் நஸீப் உட்பட பல்வேறு உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# தமிழரசின் மத்திய குழு செயற்பாடுகளுக்குத் தடைவிதிக்கவும்

## சிவமோகன் வழக்குத் தாக்கல்

(கி.வசந்தன்)

கட்சியின் யாப்பை மீறி மத்தியக் குழு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் தடை உத்தரவு ஒன்றை பிறக்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினருமான சி.சிவமோகன் யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் ஊடாக யாழ்.நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியின் மத்தியக்குழு கூட்டம் கடந்த 14 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றது.



இதன்போது கட்சியின் தலைவர் யார் என்ற விடயத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந் ததுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி அதனை வாக்கெடுப்பிற்கு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழரசுக்கட்சியின் யாப்பு விதிமுறைகளை மீறி மத்தியக்குழு எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் யாழ். நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கினை எதிர்வரும் நாட்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கட்சியின் கொள்கைகளை வகுப்பதும், செயற்திட்டங்களை வகுப்பதும் கட்சியின் பரிபாலனமும்,தலைவர் தெரிவும் பொதுச் சபையின் ஆணைக்கு உட்பட்டவை என்று தமிழரசுக் கட்சியின் யாப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மகாவலி விவசாயிகளுக்கு இரசாயனம் விசிறும் இயந்திரங்கள் வழங்கி வைப்பு



(எம்.ரீ .ஆரிப் )

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 10 பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் மகாவலி விவசாயிகளுக்கு இரசாயனம் விசிறும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு தம்புத்தேகம எச் வலயத்தில் உள்ள மகாவலி கூட்ட மண்டபத்தில் வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

தம்புத்தேகம பகுதியிலுள்ள 135 விவசாய குடும்பங்களுக்கு இந்த இரசாயன விசிறும் இயந்திரங்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டன.இதன் போது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசகர் யுவான் ருஷிடொங்ஸங் உள்ளிட்ட பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சமூகத்தின் உயர்வுக்கு கல்விச் செல்வம் இன்றியமையாதது

(பீ.எம் முக்தார்)





ஒரு சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தி கல்வியில் தான் தங்கியுள்ளது. சமூகத்தின் உயர்வுக்கும், மேம்பாட்டுக்கும் கல்விச் செல்வமே மிகவும் இன்றியமையாத சொத்தாகுமென அஷ்ஷெய்ஹ் ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) தெரிவித்தார்.

கல்வி இல்லாத சமூகத்தால் இன்றைய உலக சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது. அந்த வகையில் இன்று இடம் பெறும் கல்வியலாளரை கௌரவிக்கும் இந்த நிகழ்வானது, மிகவும் வரவேற்கத்தக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என்று ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வரும், இந்த விழாவின் பிரதம அதிதியுமான அஷ்ஷெய்ஹ். ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) கூறினார்.

சீனன்கோட்டை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளரும், பேருவளை மண்ணின் மைந்தருமான அஷ்ஷெய்ஹ். அரபாத் கரீமுக்கு (நளீமி) மலேசியா இஸ்லாமிய சர்வகலாசாலை இஸ்லாமிய சட்டத்துறைக்கான கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மேற்படி, பட்டம் பெற்ற அரபாத் கரீமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்றை பேருவளை, சீனன்கோட்டை ஜாமியத்துல் மனாரத் எனும் மகளிர் அமைப்பு, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி, மகளிர் அமைப்பின் தலைவி பஸ்லா ஸினான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சீனன்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச். எம் முக்தார் ஹாஜியார், அதிபர் பஹீமா பாயிஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

அகார் முஹம்மத் தொடர்ந்து கூறியதாவது,

இந்த பாராட்டு விழாவுக்கு பிரதம அதிதியாக என்னை அழைத்த போது, இது ஒரு முக்கியமான காத்திரமான, தார்மீக கடப்பாடுடைய பணி என்பதால் குறுகிய கால அவகாசத்திலும் உடன்பாடு தெரிவித்து இன்று கலந்து கொண்டேன்.

இந்த வைபவம் எனக்கு பல மடங்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இவர் இந்த மண்ணின் மைந்தன் என்பது ஒரு புறம். மறுபுறத்தில் எமது ஜாமியா நளீமிய்யாவின் மைந்தன் என்பது என்னை இரட்டிப்பு மகிழ்ச்சியடைய வைக்கிறது.

பேருவளை மண் மாணிக்கக்கல் வர்த்தகத்திற்கு பேரும், புகழும் பெற்றுள்ளது போல் கல்விக்கும் உயிர் கொடுக்கும் ஒரு பிரதேசமாக இன்று விளங்குவதைக் கண்டு மேலும் மகிழ்ச்சியடைகிறேன்.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எம் ஸெய்னுலாப்தீன் (ஹஹ்ஜி), சீனன்கோட்டை பள்ளிச் சங்க உப தலைவர் அஷ்ஷெய்ஹ். எம்.எஸ்.எம் றிம்வான் (நளீமி), இணைச் செயலாளர் எம்.எம். எம் சிஹாப், இணைப் பொருளாளர் எம்.எம்.எம் ஹில்மி, உறுப்பினர் தஹ்லான் மன்ஸூர், ஜாமியா நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்ஹ். எஸ்.எச்.எம் பளீல் (நளீமி) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள் உட்பட உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், உலமாக்கள், அதிபர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பாடசாலை,வீதிகளை புனரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

வெள்ள அனர்த்தத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்கள் விழுந்து சேதமடைந்த பாடசாலைகளை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதேபோல், பல வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றை புனரமைப்பு செய்ய கிழக்கு மாகாண சபையில் நிதிப்பற்றாக்குறையும் காணப்படுகிறது. இதன் காரணமாக நிதியைப் பெற முடியாமல் இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் ஊடாக அதற்கான நிதியினை வழங்கி பாடசாலை மற்றும் வீதிகளை புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரித்தார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை (18) நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பொருட்களின் விலைகளை குறைப்போம், மின்சார கட்டணங்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகளை குறைப்போம் என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றினர்.



தற்போது பொருட்களின் விலையை குறைத்ததாக தாம் அறியவில்லை. அரிசி, தேங்காய் மற்றும் சில பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாகவும் விலைகளை குறைக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அரசாங்கம் பொருட்களின் விலைகளை குறைத்து நாட்டினுடைய பொருளாதார சுமையை மக்கள் மீது சுமத்தாமல் தாம் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதேபோன்று அத்தியவசியமான உணவுப்பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்குரிய நிலையினை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# புத்தளத்தில் சத்துணவு கண்காட்சி

(எம்.எச்.எம் சியாஜ்)



விமுது ஆற்றல் மேம்பாட்டு மையம் புத்தளம் கிளை அதன் இளந்தளிர் செயல்திட்டத்தின் ஊடாக செயற்படுத்தி வரும் சஞ்சீவி உணவுப் பயிற்சிகள் மூன்று நாட்கள் புத்தளம் கிராமிய அபிவிருத்தி நிலையத்திலும் உணவு விளக்கக் கண்காட்சி நான்காம் நாள் வண்ணாத்தவில்லு பிரதேச சபையின் கூட்ட மண்டபத்திலும் நடைபெற்றது .

விமுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அதன் இளந்தளிர் வேலை திட்டத்தை புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலக பிரிவு மற்றும் வண்ணாத்தவில்லு பிரதேச செயலக பிரிவுகளில் கே.என்.எச் நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தி வருகின்றது. சத்துணவுகளை சுகாதார முறைப்படி குறைந்த செலவுகளில் தமது வீடுகளிலேயே எவ்வாறு உற்பத்தி செய்வது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்தோடு பாடசாலை மட்டங்களில் சமுதாய ரீதியிலும் நலிவுற்ற குடும்பத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவிகள், மாற்றுத்திறனாளிக் குடும்பம் என்பவைகளை நோக்காக கொண்டு இளந்தளிர் செயல்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

# புத்தளம் பீனிக்ஸ் சர்வதேச பாடசாலை சாதனை












(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் பீனிக்ஸ் சர்வதேச பாடசாலையில் 'சிப் அபகஸ் கல்வி திட்டம் 2024' இந்த வருடம் வெற்றிகரமாக குறுகிய காலத்திற்குள், தேசிய அளவிலான சிப் அபகஸ் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று பல முன்னணி இடங்களைப் பெற்று பெருமையை சேர்த்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு சுகததாச விளாசுத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் 10 மாவட்டங்களிலுள்ள 24 க்கும் மேற்பட்ட சிப் அபகஸ் கிளையை சேர்ந்த 900 மாணவர்கள் பங்குபற்றினர். இதில் புத்தளம் சிப் அபகஸ் கிளை சார்பாக பங்குபற்றிய மாணவர்கள் 1ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களை பெற்றதோடு 25 க்கும் மேற்பட்ட வெற்றிக் கிண்ணங்களையும், பதக்கங்களையும் சுவீகரித்து புத்தளம் மண்ணிற்கு பெருமை சேர்த்து தந்துள்ளனர்.

சிப் அபகஸ் புத்தளம் கிளையின் இந்த சாதனை, மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது. இதேவேளை சிப் அபகஸ் கல்வி நிலையத்துக்கு 2025 ம் ஆண்டுக்கான புதிய மாணவர்களும் அனுமதிக்கப் படவுள்ளனர்.

06 வயது முதல் 13 வயது வரையிலான மாணவர்கள் இதில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.



## கடமையிலிருந்த அரச அதிகாரிகள் மக்களை பாதுகாக்க தவறிவிட்டனர்

# சம்மாந்துறை நீதிமன்றம் கண்டனம்

(முகம்மட் முக்தார்)

காரைதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாவடிப்பள்ளி தாம்போதியில் பாய்ந்த வெள்ளத்தில் மக்களை பாதுகாக்கும் கடமைகளில் இருந்து அரச அதிகாரிகள் தவறிவிட்டதாக சம்மாந்துறை நீதிமன்றத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வெள்ளத்தில் 06 மத்ரஸா மாணவர்கள் மரணமடைந்தமை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம்(18) சம்மாந்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்த விசாரணைக்கு காரைதீவு, சம்மாந்துறை பிரதேச செயலாளர்கள், சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், காரைதீவு, சம்மாந்துறை பொலிசார் அன்றைய தினம் ஆஜராகுமாறு விசேட அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஆஜரான சமயம் சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானால் மேற்படி கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் அரச அதிகாரிகள் மக்களின் பெறுமதியான உயிர்களோடு விளையாடும் விதத்தில் செயற்படக்கூடாது என்ற பகிரங்க எச்சரிக்கையும் விடுத்தார்.

மாவடிப்பள்ளி தாம்போதியில் வெள்ள காலத்தில் வெள்ளம் கரைபுரண்டோடுவது எவருக்கும் தெரிந்தவிடயமாகும். இவ்வாறான சூழ்நிலையை அறியாது அதிகாரிகள் கடமைபுரிவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் நீதிவான் பகிரங்க மன்றில் கருத்து தெரிவித்தார்.

## வயல்களின் இழப்பீடு தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பம்

(கியாஸ் ஷாபி)

கனமழை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற் காணிகளின் இழப்பீடு தொடர்பாக, மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவி பணிப்பாளர் கே. எல். அன்சார் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில், கிண்ணியா பிரதேச செயலக பிரிவு உட்பட்ட, வன்னியனார்மடு விவசாய சம்மேளன பிரிவில் உள்ள, பாதிகாப்பட்ட சிறுபோக நெற்காணிகள் நேற்று வியாழன் (19) திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டது.

இதன்போது, வன்னியனார்மடு பிரதேசத்தில் சுமார் 700 ஏக்கர் வயல் காணிகள் உள்ளன என்றும், அதில் 50 வீதமான வயல் நிலங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ஏனையவை பகுதியளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வன்னியனார்மடு விவசாய சம்மேளன தலைவர் கே. எம். ராசிக் பரீட் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் முதல் மாவட்ட அடிப்படையில், ஒவ்வொரு கமநல சேவை பிரிவுகளிலும், இழப்பீடு தொடர்பாக, இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தொடர்ச்சியாக மீண்டும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவி பணிப்பாளர் கே. எல். அன்சார் தெரிவித்தார்.

## பொத்துவிலில் இலவச மருத்துவ முகாம்

(றியாஸ் ஆதம்)

பொத்துவில் பிரதேச மக்களின் நலன்கருதி பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் இணைந்து நடாத்திய மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகள் இடம்பெற்றதுடன், நோயாளிகளின் இரத்தத்திலுள்ள சீனியினளவு, குருதியமுத்தம், கண் பரிசோதனைகள், பல் பரிசோதனைகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இதன்போது பொத்துவில் பிரதேசத்தை சேர்ந்த மூவின மக்களும் கலந்துகொண்ட இம்மருத்துவ முகாமில் பொதுமக்கள், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் நன்றி தெரிவித்தனர்.

## கிழக்கு ஆளுநர் - வலயக்கல்வி பணிப்பாளர்கள் சந்திப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் கிழக்கு மாகாண வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது கிழக்கு மாகாணக் கல்வித் துறையில் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

## திருமலையில் அனுபவப்பகிர்வு தொடர்பான நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன்)

தேசிய அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான அம்கோர் நிறுவனத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட "மனித வியாபாரத்தினை எதிர்த்து போராடுவதற்கு அரசாங்கம் மற்றும் சமூக மைய அமைப்புகளை வலுப்படுத்துதல் மூலம் அதிகரித்த விளைவை ஏற்படுத்துதல் " எனும் திட்டத்தின் திட்ட முடிவும் அனுபவப் பகிர்வும் தொடர்பான நிகழ்வானது செவ்வாய்(17) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்து கொண்டார்.

மனித வியாபாரம் தொடர்பான காணொளி இதன்போது காட்சிப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், அம்கோர் நிறுவன ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளருமான ப.முரளிதரன்,ஐ.ஓ.எம். நிறுவன திட்ட உத்தியோகத்தர் திருமதி ம. மேரி, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனித விற்பனைக்கு எதிரான மாவட்ட மன்ற உறுப்பினர்கள், சமூக அவதானிப்பு குழுக்களின் பிரதிநிதிகள்,அம்கோர் மற்றும் ஐ.ஓ.எம். நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனையில்

## கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு



(எஸ்.எம்.அறூஸ்)

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஒருமைப்பாட்டுக்கான பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச கலை,கலாசார,சகவாழ்வு நிகழ்வும் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் நேற்று அட்டாளைச்சேனையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.டி.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக சமூர்த்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர், அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களின் உதவிப்பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அப்துல் மஜீட், பௌத்த, தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் றிஸான், இஸ்லாமிய, இந்து மதங்களின் மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இங்கு இன நல்லிணக்கம், சகவாழ்வின் முக்கியத்துவம் தொடர்பில் அதிதிகள் மற்றும் கலைஞர்கள் தமது கருத்துக்களை தெரிவித்ததுடன் அதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்தினர். அத்தோடு மாணவர்கள் மற்றும் கலைஞர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கலை, கலாசாரம் மற்றும் ஊடகத்துறையில் பணியாற்றிவரும் சிரேஷ்டமானவர்கள் பலரும் இங்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வசந்தம் தொலைக்காட்சியின் அம்பாறை மாவட்ட செய்தியாளர் எஸ்.எம்.அறூஸ் இங்கு பாராட்டிக்கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கு மாகண ஆசிரிய இடமாற்றத்தில் அநீதி




கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்குள் கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப் படாமை அநீதியானது என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

நேற்று (19) கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்..கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக வருடந்தோறும் பாடரீதியான ஆசிரியர் தேவையான வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக ஆசிரியர்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பதிலீட்டின் அடிப்படையில் "இரண்டு வருடம் கட்டாய நிபந்தனைக் காலம் குறிப்பிட்டு" இடமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளனர்.

இக்காலத்தை பூர்த்தி செய்தவுடன் அவ்வாசிரியர்களுக்கு அவர்களுடைய முன்னைய வலயங்களுக்கு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக இடமாற்றம் வழங்கப்பட்டு வந்துள்ளதை சகலரும் அறிவர்.

இதன் அடிப்படையில் முன்னாள் கல்விப் பணிப்பாளரினால் "வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் 2021 (பதிலீடு) தமிழ்மொழி மூலம்" என்று தலைப்பிட்டும், வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தில் நீ/20/01/04 இலக்க 2021.04.08ஆந் திகதிய அறிவித்தல் கடிதத்திற்கு அமைவாக இடமாற்றம் வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டதற்கு அமைவாக, கடமையேற்று "இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த" ஆசிரியர்களுக்கு இதுகாலவரை இடமாற்றம் வழங்கப்படாமை அநீதியானது. மேலும், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரது "வலங்களுக கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 2025" என்று தலைப்பிட்ட நீ/20/01/04 இலக்க 2024.06.10ஆந் திகதிய அறிவித்தல் கடிதம் பந்தி (1) இல் வலய இடமாற்ற அதிகாரியினால் தீர்மானிக்க ப்படுகின்ற உச்ச பட்ச சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டமைக்கு அமைவாக இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த சுமார் 30 பேர் வரையான ஆசிரியர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

இவ் ஆசிரியர்கள் பொத்துவில் அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் ஏனைய பிரதேசங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச பாடசாலைகளிலும் கடமைபுரிகின்றனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் "வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்– 2025 முன்மொழிவு என்று தலைப்பிட்டும் நீ/20/01/04 இலக்க 2024.11.13ஆந் திகதியிடப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப் படவில்லையென்பதை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அரசாங்கம் நீதியான, நேர்மையான நிருவாக செயற்பாட்டை விரும்புகின்ற அரசாக இருப்பதால் கட்டாய நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தொடர்பில் தாங்கள் பொருத்தமான நீதியான நடவடிக்கையை உரியவர்கள் எடுக்க வேண்டும்.

குறித்த ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் என்றும் கூறினார்.

## மூதூர் பிரதேச செயலகத்தில் பிரதேச கலை இலக்கிய விழா



(எம்.என்.எம்.புஹாரி)

மூதூர் பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மூதூர் பிரதேச கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா மூதூர் பிரதேச செயலகத்தில் புதன்கிழமை மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் தலைமையில் நடைபெற்றது. பிரதேச கலை இலக்கிய விழாவில் நான்கு சமூகங்களையும் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள், கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களினால் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து சிறப்பித்தார்.

விசேட அதிதிகளாக கிண்ணியா பிரதேச செயலாளர், வெருகல் பிரதேச செயலாளர், சேருவில பிரதேச உதவி பிரதேச செயலாளர், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச சபை செயலாளர், சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கலாசார அதிகார சபையினர், மூத்த கலைஞர்கள், அகம் மற்றும் World Vision ஆகிய நிறுவனங்களின் இணைப்பாளர்கள் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

அத்தோடு பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட பாடசாலை மற்றும் திறந்த மட்டப் போட்டிகளில் கலந்து முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டியவர்களுக்கும், நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் அதிதிகள் மற்றும், பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை வித்தியாலய சுவர்களில் பாரிய வெடிப்புகள்



▮ எம்.எஸ்.எம்.மஸாஹிம்

மாத்தளை நகர மத்தியில் அமைந்துள்ள முஸ்லிம் வித்தியாலயத்தின் சுவர்களில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இப்பாரிய வெடிப்புகளால் சுவர்கள் எந்நேரத்திலும் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருப்பதாகப் பெற்றோர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1925ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை மாத்தளை கொங்காவளை வீதிக்கும் மாத்தளை பிரதான வீதிக்குமிடையில் சுமார் 29 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் அமைந்துள்ளதாகவும் தரம் 11 வரை வகுப்புகள் நடைபெறுவதோடு சுமார் 265 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இப்பாடசாலையின் குறைபாடுகளோ அடிப்படைத் தேவைகளோ தீர்க்கப்படவில்லையென பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் கடும் மழை மற்றும் சீரற்ற காலநிலையால் பாரிய அனர்த்தம் ஏற்படும் முன்னர் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சர் மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சு – மாகாண ஆளுநருக்கும் பெற்றோர்கள் – ஊர்மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் நோயாளர் படகு சேவையை தொடர வேண்டும்

## வடக்கு ஆளுநர் கடற்படையிடம் கோரிக்கை

யாழ். நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையிலான நோயாளர் கொண்டு செல்லும் படகு சேவையை கடற்படையினர் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் கடற்படையினரிடம் கோரியுள்ளார்.

ஹியூமெடிக்கா நிறுவனத்தால் நடத்தப்படும் நோயாளர்காவு படகுச்சேவை தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நெடுந்தீவிலிருந்து நோயாளர்களை கொண்டுவரும் ஹியூமெடிக்கா நிறுவனத்தின் நோயாளர்காவு படகுச்சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாதாந்தம் 15ஆம் திகதியிலிருந்து 20 நோயாளர்கள் வரை இவ்வாறு படகுச்சேவை மூலம் கொண்டு வரப்படுகின்றார்கள். இவ்வாறான சேவையை முன்னெடுக்கும் ஹியூமெடிக்கா நிறுவனத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும், கடற்படையினராலும் தற்போது நோயாளர்காவு படகுச்சேவை நடத்தப்பட்டு வருகின்றமையை குறிப்பிட்ட ஆளுநர் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்ததுடன் கடந்த நவம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக படகு சேவைகள் இடம்பெறாத நிலையில்,



நெடுந்தீவில் இருந்து மூன்று நோயாளர்கள் விமானப்படையினரின் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழிலாளர் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன?

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் கேள்வி

▮ பு.கஜிந்தன்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி – இலங்கையின் ஜனாதிபதி அநுரவின் சந்திப்பின்போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் வினவவுள்ளேன் என முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய குறித்த விடயம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயத்தின் போது இலங்கை – இந்தியா இடையே கடற்றொழிலாளர்கள் விடயம் தவிர இணக்கம் காணப்பட்ட அல்லது கைச்சாத்திடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வலுவூட்டியதாகவே அமைந்துள்ளது. அதனடிப்படையில் குறித்த செயற்பாட்டை நான் வரவேற்கின்றேன்.

இதேவேளை கடற்றொழிராளர் பிரச்சினைகளில் எந்தவிதமான தீர்வுகளையும் குறித்த விஜயத்தின்போது எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இதேநேரம் மனிதாபிமான அடிப்படையில் குறித்த விடயத்தை அணுக வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறாயின் மனிதாபிமான நிலைப்பாடு என்பது என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கின்றது.

அதாவது இலங்கையின் கடற்பரப்பிற்குள் இந்திய மீன்பிடியாளர்கள் வந்து மீன்களை பிடித்துச் செல்வதற்கும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கை கடற்படையினர் அவர்களைக் கைது




செய்யாதிருக்க வேண்டும் என்பதே இந்த மனிதாபிமான நிலைப்பாடாக இருக்க வேண்டும். ஆனால் எனது நிலைப்பாடு அன்றும் சரி இன்றும் சரி எமது கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக இந்திய மீன்பிடியாளர்கள் உள்நுழைந்து மீன்களை பிடிக்கவோ எமது வளங்களை அபகரிக்கவோ ஒரு வினாடி கூட இடமளிக்கக் கூடாதென்பதாகவே இருக்கின்றது. இதை நான் பொது வெளியிலும் பல தடவைகள் கூறியிருக்கின்றேன்.

# போதைப் பொருள் வியாபாரம்; கடுகன்னாவையில் ஒருவர் கைது

## இரட்டைமுனை வாள் – மூன்று கடவுச் சீட்டுகள் மீட்பு



▮ எம்.ஏ.அமீனுல்லா

கண்டி, கடுகன்னாவ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றின் அறையொன்றை வாடகைக்கு எடுத்து அங்கு, போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள குருந்துகொல்ல வரெல்லகம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவர் சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் மற்றும் ஹாஷ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் நேற்று முன்தினம் (18) கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விஷேட பணியக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தங்கியிருந்த அறைக்குச் சென்று சோதனையிட்ட போது ஐஸ் போதைப்பொருள் 69 கிராம், ஹேஷ் 72 கிராம் மற்றும் டிஜிட்டல் தராசில் பொதி செய்யப்பயன்படுத்தப்படும் 45 பொலித்தீன் பை கவர்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் அறையிலிருந்து முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா ஆடை, இரட்டை முனைகள் கொண்ட வாள் மற்றும் மூன்று கடவுச் சீட்டுகள் என்பனவும் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# புலம்பெயர் தொழிலாளர் பிள்ளைகளின் புலமைப் பரிசில் தொகை அதிகரிப்பு

▮ கண்டி நிருபர்

புலம் பெயர் தொழிலாளர் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் 5,000 ரூபா புலமைப் பரிசில் 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊழியர்களுக்குத் தொழில் செய்வதற்கு 50,000 ரூபா பெறுமதியான நிதியல்லாத பொருளுதவி வழங்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிக்கத்தின் மத்திய மாகாண சிரேஷ்ட முகாமையாளர் நிலுஷி கன்னங்கர தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணிபுரிந்த கண்டி மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட புலம்பெயர் தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் நேற்று முன்தினம் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

நாடு திரும்பிய தொழிலாளர்களின் சாதகமான காரணிகள், பயிற்சி, தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் போன்றவற்றை வழிநடத்தவும், நாட்டுக்கு அன்னியச் செலாவணியைக் பெற்றுத்தந்த தொழிலாளர்களை ஊக்குவிக்கவும் இச் சங்கம் நிறுவப் பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

# ரயிலில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு



▮ செ.திவாகரன்

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று (19) அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொட்டகலை ரயில் நிலையத்திற்கு அருகாமையில் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த இரவு நேர ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் கொட்டகலை கங்கைபுரத்தை சேர்ந்த வெள்ளசாமி ஜெயகுமார் (வயது 40) திருமணமான ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது புகையிரதத்தில் மோதுண்டு இறந்தாரா? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆழியவளையில் இரவுநேரம் பாரிய மணல் கொள்ளை



▮ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாகச் சட்டவிரோத மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் (18) பொலிசாருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், தெரியப்படுத்திய போதும் அவர்களால் குறித்த மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு நேரம் காவல்களை அமைத்து JCB இயந்திரம் கொண்டு டிப்பர்கள் மூலம் பாரிய மணல் கொள்ளையில் சட்டவிரோத மணல் கடத்தல்காரர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் குற்றம் சுமத்திய அப்பிரதேச மக்கள்,பாதைகளை அழித்து வீதிக்கு அருகில் வைத்தே பெருமளவான மணல் வளத்தைச் சூறையாடிச் செல்வதால் தற்பொழுது பாதைகளிலும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறுகின்றனர்.

மணல் மேடுகளை அழிப்பதால் கடல் நீர் குடி மனைகளுக்குள் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. கிராம அலுவலர் ஊடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிசாருக்கு அறிவித்தும் இதுவரை மணல் கொள்ளை தடுத்து நிறுத்தப்படவில்லை எனவும் யாரையும் இதுவரை கைது செய்யவில்லை என்றும் தெரிவித்தனர்.

உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொலிசாருடன் இணைந்து ஆழியவளை கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி தமது கிராமத்தைப் பாதுகாத்துத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள்



▮ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அண்மைய மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட முல்லைத்தீவு – நெடுங்கேணி, கரடிப்பிலவு ஆகிய கிராமங்களிலுள்ள 56 குடும்பங்களுக்கு ரூபா 280,000 பெறுமதியான அத்தியாவசியமான உலருணவு பொருட்கள் கரடிப்பிலவு முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 10.30 மணியளவில் அறநெறிப் பாடசாலையின் இணைப்பாளர் த.ஜீவா தலைமையில் நடைபெற்ற இவ் உதவி வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# நாடாளுமன்ற வளாகத்தில் மோதல்




நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி, பா.ஜ.க அமைச்சர்களுக்கு இடையே நேற்று கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் பா.ஜ.க அமைச்சர் பிரதாப் சாரங்கியின் மண்டை உடைந்து இரத்தம் வழிந்தோடிய நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இம்மோதலில் படுகாயமடைந்த மற்றொரு பா.ஜ.க அமைச்சர் முகேஷ் ராஜ்புத், ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். அண்ணல் அம்பேத்கர் குறித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு நாடாளுமன்றம் முதல் நாட்டின் எல்லா பகுதிகளிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி மற்றும் பா.ஜ.க அமைச்சர்களுக்கு இடையே கடுமையான மோதலும் ஏற்பட்டது. மத்திய அமைச்சர் அமித்ஷா பதவி விலக கோரி, நாடாளுமன்ற வளாகத்தில் நீல நிற உடைகளில் இந்தியா கூட்டணி அமைச்சர்கள் பேரணியாக சென்று போராட்டம் நடாத்தினர். இந்தப் போராட்டத்துக்கு பா.ஜ.க கூட்டணி அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவித்து முழக்கமிட்டனர். அப்போது நாடாளுமன்றத்துக்குள் செல்ல எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி முயற்சித்தார். ஆனால் பா.ஜ.க அமைச்சர்களோ அவரைத் தடுத்து தள்ளிவிட்டனர். இதனால் கைகலப்பு ஏற்பட்டு பின்னர் மோதலாக அது வெடித்தது. இந்த மோதலில் பா.ஜ.க அமைச்சர் பிரதாப் சாரங்கி மண்டை உடைந்தது. அவர் தலையில் இரத்தம் வழிந்தோடிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதேபோல மற்றொரு பா.ஜ.க அமைச்சர் முகேஷ் ராஜ்புத் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து வைத்தியசாலைக்கு சென்ற மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் அமைச்சர்களுக்கான சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

இதனிடையே நாடாளுமன்றத்துக்குள் தங்களை நுழையவிடாமல் தடுத்த பா.ஜ.க அமைச்சர்கள் மீது சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் இந்தியா கூட்டணி அமைச்சர்கள் புகார் தெரிவித்தனர். அத்துடன் நாடாளுமன்ற வளாகத்தில் மீண்டும் இந்தியா கூட்டணி அமைச்சர்கள் போராட்டம் நடத்தினர். இதனால் நாடாளுமன்ற வளாகத்தில் பெரும் பதற்றம் நிலவியமை குறிப்பிடத்தக்கது.




# உடல் உறுப்புகள் தான பட்டியலில் தமிழகம் முதலிடம்

அதிகமான உடல் உறுப்புகள் தானம் செய்த மாநில தரவரிசை பட்டியலில் தமிழகம் முதல் இடத்தை பிடித்துள்ளது. இவ்வாண்டில் மட்டும் 262 பேர் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர்.

ஒருவர் இறக்கும்போது, அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்படுவதால், பலருக்கு மறுவாழ்வு கிடைக்கிறது. இதனால், உடல் உறுப்பு தானம், மிக உயரியதாக கருதப்படுகிறது. தானமாக கிடைத்த உடல் உறுப்புகள் மூலம் மறுவாழ்வு பெற்றவர்கள் இவ்வுலகில் ஏராளம். இதனால் உடல் உறுப்பு தானம் அவசியம் குறித்து இந்திய சுகாதார துறை தொடர்ந்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், அரசு மற்றும் தனியார் உடல் உறுப்புகள் மறுவாழ்வு மையத்தில், நடப்பாண்டில் மட்டும் 262 பேர் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளதாக அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு முடிவடைய இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில், உடல் உறுப்பு தானம் செய்வதில் தமிழகம் புதிய சாதனை படைத்துள்ளது. உடல் உறுப்புகள் மறுவாழ்வு மையம் திட்டம் 2008ம் ஆண்டு ஆரம்பித்தது. அப்போது 7 பேர் மட்டுமே உடல்உறுப்புகளினை தானம் செய்தனர். தற்போது புதிய



சாதனையாக 262 பேர் உடல் உறுப்புகள் தானம் செய்துள்ளனர். உறுப்பு தானம் செய்பவர்களுக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்ததில் இருந்து நன்கொடைகள் அதிகரித்தது என வைத்தியர்கள் தெரிவித்தனர். அத்துடன், தானம் பெறப்பட்டவர் உடல் கொண்டு செல்லப்படும் போது, மருத்துவமனை ஊழியர்களும் ஊர்வலமாக சென்று இறுதி மரியாதை செலுத்துகின்றனர்.

முதலமைச்சரின் உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுவதால், உறுப்புகளுக்கான தேவை தொடர்ந்து அதிகமாக உள்ளது. தமிழகத்தில் உடல் உறுப்பு தானம் தேவைப்படுவோர், அரசிடம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், தானமாக கிடைக்கும் உறுப்புகள் பொருத்தப்படுகின்றன. தற்போதுள்ள முன்பதிவு பட்டியலின்படி தமிழகத்தில் சிறுநீரக தானம் பெறுவதற்காக மாத்திரம் 7268 பேர் காத்திருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தரபிரதேசத்தில் விபத்து



ஷாஜஹான்பூர் மாவட்டத்தில் உள்ள மதன்பூர் பகுதியில் வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதியதில் ஐந்து பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் பயணித்த மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். வாகனத்தில் பயணித்த பத்து பேரில் ஐந்து பயணிகளும் காயமடைந்தனர். வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் கண்காணிப்பாளர் ஷாஜஹான்பூர் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் வைத்தியசாலைக்கு நேரில் சென்று காயம் அடைந்தவர்களை சந்தித்ததுடன் “இரண்டு குழந்தைகளுக்கு எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளன, அவர்களின் சிகிச்சை சிறப்பாக நடைபெற்று வருகிறது. தேவைப்பட்டால், தீவிரமான வழக்குகள் உயர் மருத்துவ மையங்களுக்கு பரிந்துரைக்கப்படும், கலந்துகொள்ளும் மருத்துவர்களால் அது முடிவு செய்யப்படும் மேலும், காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நபர்களின் நிலையை அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும்” என பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் உத்தரப் பிரதேசத்தின் காஸ்கஞ் பகுதியில் நடந்த வீதி விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். திருமண விழாவிற்கு சென்று கொண்டிருந்த பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது டிராக்டர் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் பயங்கரவாதிகள் 5 பேர் சுட்டுக்கொலை; பாதுகாப்பு படையினர் அதிரடி



ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் 5 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் குல்காம் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. அப்பகுதியில் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதற்கு பாதுகாப்பு படையினர் பதிலடி கொடுக்கும் வகையில் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் பயங்கரவாதிகள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதனால் அவர்களை தேடும் பணியில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# இந்திய கல்வியியலாளருக்கு பூட்டானில் கௌரவிப்பு



பூட்டான் நாட்டில் இந்திய கல்வியியலாளர் அருண் கபூருக்கு அந்நாட்டு அரசினால் இராஜமரியாதை அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பூட்டான் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் கல்வி நிலையங்களை நிறுவிய இந்தியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற கல்வியலாளரான அருண் கபூருக்கு பூட்டான் அரசினால் இராஜமரியாதை அளிக்கப்பட்டுள்ளது. பூட்டான் நாட்டின் 117 ஆவது தேசியநாளை முன்னிட்டு திம்பு சங்லிமிதங் அரங்கத்தில் நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்ச்சியின் போது பூட்டான் மன்னர் ஜிக்மே கெசர் நம்க்யேலினால், அருண் கபூருக்கு “டாஷோ” என்ற பட்டமும் “புரா மார்ப்” எனப்படும் சிவப்பு நிற சால்வை மற்றும் “படாங்கு” எனப்படும் சடங்கு வாளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# இரு மியான்மார் பெண் கைதிகள் தப்பியோட்டம்



இந்தியாவின் மிசோரம் மாநிலத்தின் சிறையில் இருந்து இரண்டு மியான்மார் நாட்டு பெண் கைதிகள் தப்பியோடினர். கிழக்கு மிசோரமில் மியான்மார் நாட்டுடனான இந்திய எல்லை அமைந்திருக்கும் சம்பாய் மாவட்டத்திலுள்ள சிறையிலிருந்து மியான்மார் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண் கைதிகள் தப்பியோடியதாக நேற்று அந்த மாநில பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட மியான்மார் நாட்டைச் சேர்ந்த வன்சுயேனி, சுயினுஃ பேலி மற்றும் லால்சான்மாவி ஆகிய இருவரும் தகர ஓடுகளினால் செய்யப்பட்ட சிறை கழிவறையிலிருந்து தப்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அய்சுசுவாலிலுள்ள பெண்களுக்கான மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த லால்சான்மாவின் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். பின்னர் ஹெரோயின் வைத்திருந்த 4 பேர் கைது செய்யப்பட்டபோது அவர்கள் அந்த போதைப்பொருளை தப்பியோடிய லால்சான்மாவிடம் வாங்கியதாக தெரிவித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து இந்த வருடம் மே 11 அன்று அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். தற்போது அவர் மீண்டும் வேறொரு சிறை கைதி பெண்ணோடு தப்பி ஓடியது குறித்து சம்பாய் பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய இராணுவ தளபதி கொலை; உஸ்பெகிஸ்தான் நபர் கைது






மொஸ்கோவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்ட ஜெனரல் இகோர் கிரிலோவ் மற்றும் அரவது உதவியாளர் உயிரிழந்த வழக்கில் உஸ்பெகிஸ்தானை சேர்ந்த 29 வயதுடைய நபரை கைது செய்ததாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய ஆயுதப்படைகளின் கதிரியக்க, இரசாயன மற்றும் உயிரியல் பாதுகாப்பு படைகளின் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ், அவரது உதவியாளர் மொஸ்கோவின் ரியாசான்ஸ்கி ப்ராஸ்பெக்டில் அமைந்துள்ள குடியிருப்பு கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் செவ்வாய்க்கிழமை அதிகாலை நிறுத்தப்பட்டிருந்த மின்சார ஸ்கூட்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடிக்கச் செய்யப்பட்டதில் உயிரிழந்தனர். இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் கைதான சந்தேக நபரிடம் ரஷ்யாவின் விசாரணைக் குழு நடத்திய விசாரணையின் போது, அவர் உக்ரேனிய சிறப்பு சேவைகளால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாக ஒப்புக்கொண்டார்.

அதேநேரம், கைது செய்யப்பட்ட நபர் 1995இல் பிறந்த உஸ்பெகிஸ்தான் குடிமகன் என தெரிவித்தார். மேலும் விசாரணையில் அவர், கிரிலோவ் வாழ்ந்த குடியிருப்பு கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த மின்சார ஸ்கூட்டரில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். இடத்தைக் கண்காணிக்க சந்தேக நபர், ஒரு காரை வாடகைக்கு எடுத்ததுடன், அங்கு அவர் உக்ரேனின் டினிப்ரோ நகரத்தில் தாக்குதல்



சூத்திரதாரிகளுக்கு வெடிப்பு சம்பவத்தை நேரலையில் ஒளிபரப்பு செய்வதற்காக வீடியோ கமராவை நிறுவியிருந்தார்.

கிரில்லோவ் மற்றும் அவரது உதவியாளர் இலியா பொலிகார்போவ் கட்டிடத்தை விட்டு வெளியேறியபோது, வெடிக்கும் சாதனம் தொலைவிலிருந்து செயல்படுத்தப்பட்டது என்பதும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில், சந்தேக நபரின் விசாரணையின் வீடியோவை ரஷ்யாவின் பெடரல் செக்யூரிட்டி சர்வீசஸ் (FSB) வெளியிட்டது. அந்த வீடியோவில், கிரிலோவைக் கொன்றதற்கு ஈடாக அவருக்கு 100,000 அமெரிக்க டொலர்கள் வெகுமதியும் ஐரோப்பிய கடவுச்சீட்டும் வழங்கப்பட்டதாக அவர் ரஷ்ய மொழியில் கூறுவதும் வெளிப்படுத்தப்பட்டது. உக்ரேனின் அறிவுறுத்தலின் பேரில், அவர் மொஸ்கோவிற்கு வந்து குடியிருப்புக்கு அருகில் வெடிக்கும் கருவியைப் பெற்றதாக FSB தெரிவித்தது. எவ்வாறெனினும், சந்தேக நபரின் வாக்குமூலம் கட்டாயத்தின் பேரில் செய்யப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. உக்ரேனிய பாதுகாப்பு சேவையான SBU ஏற்கனவே இந்தக் கொலையின் பின்னணியில் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சிரியா உலகை அச்சுறுத்தாது; கிளர்ச்சிக் குழுத் தலைவர்



தற்சமயம் தமது நாடு போரினால் சோர்வடைந்துள்ளதாகவும், அதன் அண்டை நாடுகளுக்கோ அல்லது மேற்கு நாடுகளுக்கோ தம்மால் அச்சுறுத்தல் ஏற்படாது என சிரியாவின் கிளர்ச்சிக் குழுத் தலைவர் அஹ்மத் அல்-ஷாரா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், சர்வதேச நாடுகள் சிரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் எனவும் டமாஸ்க ஸில் பிபிசிக்கு அளித்த செவ்வியின் போது அவர் வலியுறுத்தினார். இரண்டு வாரங்களுக்கு முன்னர் பஷர் அல்-ஆஸாத்தின் ஆட்சியைக் கவிழ்த்த மின்னல் தாக்குதலுக்கு ஷரா தலைமை தாங்கினார். அவர் கிளர்ச்சிக் கூட்டணியின் மேலாதிக்கக் குழுவான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமின் (HTS) தலைவர் ஆவார். மேலும் அவர் முன்பு அபு மொஹமட் அல்-ஜோலானியின் பெயரால் அறியப்பட்டார். 2016இல் அல்-கொய்தாவின் பிளவுக் குழுவாக பிரிந்ததிலிருந்து ஹயாத் தஹ்ரிர் அமைப்பு ஐ.நா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்து போன்ற பலவற்றினால் பயங்கரவாத குழுவாக பெயரிடப்பட்டுள்ளது.

ஹயாத் தஹ்ரிர் பயங்கரவாதக் குழுவல்ல என்று வலியுறுத்திய ஷரா, அதனை பயங்கரவாத அமைப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். ஹயாத் தஹ்ரிர் பொதுமக்களையோ அல்லது பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளையோ குறிவைக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், சிரியாவை ஆப்கானிஸ்தானின் பதிப்பாக மாற்ற விரும்புவதை அவர் மறுத்தார். பெண்களுக்கு கல்வியில் நம்பிக்கை இருப்பதாகவும், பல்கலைக்கழகங்களில் பெண்களின் சதவீதம் 60% இற்கும் அதிகமாக இருப்பதாக நான் நினைக்கிறேன் என்றும் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், மது அருந்துவது சிரியாவில் அனுமதிக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்ட போது, பல விடயங்கள் சட்டப் பிரச்சனைகள் என்பதால் அதைப் பற்றி பேச எனக்கு உரிமை இல்லை. அரசியலமைப்பை எழுதுவதற்கு சிரிய சட்ட நிபுணர்கள் குழு ஒன்று இருக்கும். அவர்கள் முடிவு செய்வார்கள். எந்த ஆட்சியாளரோ அல்லது ஜனாதிபதியோ சட்டத்தை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜப்பானின் ரொக்கெட் திட்டம் தோல்வி



ஜப்பானின் கெய்ரோஸ் ரொக்கெட், விண்ணில் ஏவிய சில நிமிடங்களிலேயே வெடித்துச் சிதறியது. இரண்டாவது முறையாக, முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஜப்பானை சேர்ந்த, ஸ்டார்ட் அப் ஸ்பேஸ் ஒன் என்ற தனியார் விண்வெளி நிறுவனம் கெய்ரோஸ் ரொக்கெட்டை விண்ணில் ஏவ முடிவு செய்தது. இதற்கான ஏற்பாடுகளினை அந்நிறுவனம் செய்து வந்தது. கடந்த மார்ச் 13ம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. புறப்பட்ட சில விநாடிகளில் தானாகவே வெடித்து சிதறியது. இதனால் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், மீண்டும் இரண்டாவது முறையாக, ஸ்பேஸ் ஒன் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் வாகாயாமாவில் உள்ள ஸ்பேஸ்போர்ட் கீ தளத்திலிருந்து 5 சிறிய செயற்கைக்கோள்களைக் கொண்ட கெய்ரோஸ் ரொக்கெட்டை ஏவியது. ஆனால் விண்ணில் ஏவிய சில நிமிடங்களிலேயே ரொக்கெட் வெடித்துச் சிதறியது. இதனால் இரண்டாவது முயற்சியும் தோல்வியில் முடிந்தது. "ரொக்கெட்டின் செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால், பாதுகாப்பு கருதி அந்த ரொக்கெட்டை வெடிக்கச் செய்தோம்" என ஸ்பேஸ் ஒன் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விண்வெளியில் சிக்கிய சுனிதா வில்லியம்ஸ்; பூமி திரும்புவதில் மேலும் தாமதம்



சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விண்வெளி வீரர் சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்பும் பயணம் மேலும் ஒரு மாதம் தாமதமாகும் என நாசா தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் 5ம் திகதி ஆய்வுக்காக சர்வதேச விண்வெளி மையத்திற்கு நாசா விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் சென்றனர். ஆனால், விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இருவரும் பல மாதங்களாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கி உள்ளனர். இவர்களை பூமிக்கு மீட்டு வர எலான் மஸ்கின் உதவியை நாசா நாடியது.

எக்ஸ் சமூகவலைத்தள நிறுவனர் எலான் மஸ்க், க்ரு டிராகன் என்ற பிரமாண்டமான விண்கலத்தை வைத்து இருக்கிறார். இதனால் எலான் மஸ்கை நாசா கடவுள் போல் நம்பி இருந்தது. நாசாவும், எலான் மஸ்க்கும் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, 2025 பிப்ரவரியில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோரை பூமிக்கு அழைத்து வர வேண்டும். ஆனால் இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் தற்போது கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், க்ரு டிராகன் விண்கலம் விண்வெளிக்கு ஏவ கூடுதல் நேரம் தேவைப்படுகிறது. மார்ச் மாதம் இறுதியில் தான் விண்கலம் விண்ணில் செலுத்தப்படும் என எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரையும், பூமிக்கு திரும்ப அழைக்கும் திட்டம் அடுத்த ஆண்டு மார்ச் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நாசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலிபோர்னியாவில் பறவைக் காய்ச்சல் அவசரநிலை பிரகடனம்

கலிபோர்னியாவின் லூசியானாவில் வசிக்கும் நபர் ஒருவர் கடுமையான பறவைக் காய்ச்சல் தொற்றினால் பாதிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்தது.

H5N1 பறவைக் காய்ச்சலை எதிர்த்துப் போராடுவதற்காக அமெரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான கலிபோர்னியாவில் புதன்கிழமை அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது.

லூசியானாவில் உள்ள ஒருவர் பறவைக் காய்ச்சல் தொற்று காரணமாக கடுமையான சுவாச அறிகுறிகளுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாநில சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். 65 வயதிற்கு மேற்பட்ட மற்றும் அடிப்படை மருத்துவ பிரச்சனைகளைக் கொண்ட நபர், கொல்லைப்புற பண்ணையில் நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்த பறவைகளுடன் நெருக்கமாக பணியாற்றியதாக தெரிவிக் கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து, அமெரிக்காவில் 60 இற்கும் மேற்பட்ட பறவைக் காய்ச்சல் நோய்த் தொற்றுகள் பதிவாகியுள்ளன. வைத்திய நிபுணர்கள், நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகளுடன் தொடர்பு கொள்ளும் போதும், கோழிகளைக் கையாளும் போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தினர்.



# காசாவை முற்றுகையிட்ட இஸ்ரேல் 16 பேர் உயிரிழப்பு

வடக்கு காசாவை முற்றுகையிட்டு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அல்-ஆலி அரப் மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் மற்றும் ஒரு வைத்தியர் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களில் சிலரை இஸ்ரேல் மீட்டது. மீதமுள்ளவர்களையும் மீட்கும் முயற்சியாக தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் போரில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் வடக்கு காசாவை முற்றுகையிட்டு இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இதில் அல்-ஆலி அரப் மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் மற்றும் ஒரு வைத்தியர் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் பெய்த் ஹனூன், பெய்த் லாஹியா மற்றும் ஜபாலியா ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பசி, பட்டினியால் அவதிப்படுகின்றனர். 70 நாட்களுக்கும் மேலாக இஸ்ரேல் இந்த பகுதியை ஆக்கிரமித்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதனால் ஐ.நா அமைப்பால் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படுகின்றது. அதன் கோரிக்கையை இஸ்ரேல் மீண்டும் நிராகரித்துள்ளது. காசா மீது நடத்தப்பட்டு வரும் இஸ்ரேலின் இந்த தாக்குதலால் இதுவரையில் 45,097 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். 107,244 பேர் காயமடைந்துள்ளனர்.

Sports விளையாட்டு

# இருவருட பின்னடைவே ஓய்வு

## சென்னையில் அஷ்வின் தெரிவிப்பு



"எப்போதும் நான் உறங்குவதற்கு முன்னர் சிறப்பாக விளையாடியது அனைத்தும் நினைவுக்கு வந்துபோகும். ஆனால் கடந்த 2 வருடங்களாக அப்படி எதுவும் வரவில்லை. அதனால் நான் அடுத்த பாதையை தேர்தெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது" என அஷ்வின் தெரிவித்தார்.

நேற்று சென்னை திரும்பிய அஷ்வினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

2011ஆம் ஆண்டுக்கு பிறகு தனக்கு இப்படி ஒரு வரவேற்பு கிடைத்ததாக தெரிவித்தார். இந்திய அணியின் கப்டனாக முடியவில்லையே என்ற வருத்தம் உள்ளதா என்று கேட்டபோது,

அப்படி எந்த வருத்தமும் எனக்கு இல்லை. மேலும் எனக்குள் எப்போம் ஒரு கிரிக்கெட்டர் உள்ளார், அஷ்வின் என்ற இந்திய கிரிக்கெட் வீரர் தான் இனி இல்லை என்றும், முடிந்தவரை அதிக நாட்கள் கிரிக்கெட் விளையாடுவேன் எனவும் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஐபிஎல் போட்டிகளில் ரவிசந்திரன் அஷ்வின் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து சுற்றுலாவில் வெல்லாலகே வெளியேற்றம்



நியூசிலாந்து சுற்றுலாவிற்கு, பெரிய அளவில் மாற்றமில்லாத 16 பேர் கொண்ட டி20 அணியை இலங்கை தேர்வுக் குழு அறிவித்துள்ளது. கடந்த மாதம் உள்நாட்டில் விளையாடிய அதே அணியிலிருந்து துனித் வெல்லாலகே மட்டுமே நீக்கப்பட்டுள்ளார். குறித்த அணி இன்று நியூசிலாந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெல்லாலகே நீக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், நியூசிலாந்தில் அவரது சுழல் பந்துவீச்சு தன்மை அந்நாட்டின் குளிரான காலநிலையில் பலனளிக்காமல் போகலாம். வெல்லாலகே தற்போது யாழ்ப்பாணம் டைட்டன்ஸ் அணிக்காக லங்கா டி10 போட்டியில் பங்கேற்று வருகிறார்.

அசலங்க தலைமையிலான இலங்கை அணியில் – பெத்தும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், அவிஷ்க பெர்னாண்டோ, குசல் பெரேரா, கமிந்து மெண்டிஸ் மற்றும் அசலங்க ஆகியோர் முதன்மை துடுப்பாட்டத் திறன்களைக் கொண்டுள்ளனர்.

**NZ vs SL - டி20 தொடர் விபரங்கள்**

டிசம்பர் 28 – 1வது டி20 மவுண்ட் மவுங்கானு

டிசம்பர் 30 – 2வது டி20ஐ மவுன்ட் மவுங்கானு

ஜனவரி 2 – 3வது டி20ஐ நெல்சன்

சரித் அசலங்க (கெப்டன்), பெத்தும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால், பானுக ராஜபக்ஷ, வனிந்து ஹசரங்க, மஹேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வான்டர்சே, சமிது விக்கிரமசிங்க, மதீஷ பத்திரன, நுவன் துஷார, அசித்த பெர்னாண்டோ, பினுர பெர்னாண்டோ.



புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைப்பந்தாட்ட போட்டி புத்தளம் ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் திக்ரா 07ஸ் அணி வெற்றி வாகை சூடி சம்பியனாகியதோடு அல் நாஸர் அணி இரண்டாம் இடத்தைப்பெற்றது.

தொடரின் சிறந்த வீரராக அல் நாஸர் அணியின் எம்.முரா தெரிவானார். தொடரின் சிறந்த கோல் காப்பாளராக திக்ரா 07 ஸ் அணியின் வீரர் முஹம்மது முபாரக் தெரிவானார்.

**படங்கள் : எம்.யூ.எம்.சனூன்**

# அஷ்வினை தொடர்ந்து கோலி, ரோஹித் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ரவிச்சந்திரன் அஷ்வினுக்குப் பிறகு, விராட் கோலி மற்றும் ரோஹித் ஷர்மா போன்றவர்கள் விரைவில் ஓய்வை அறிவிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் சர்வதேச டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக கோலி, ரோஹித் மற்றும் ஜடேஜா போன்றவர்கள் அறிவித்திருந்தனர்.

ரோஹித்தின் துடுப்பாட்டம் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது, ஏனெனில் அவர் தனது கடைசி 11 இன்னிங்ஸ்களில் சராசரியாக 11.69 என்ற ரீதியில் ஓட்டங்களை குவித்துள்ளார்.

அதேபோல், அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் கோலி சிறப்பாக செயல்படவில்லை. பெர்த்தில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸ் மட்டும் சதம் அடித்திருந்தார்.

இந்நிலையிலேயே, கோலி மற்றும் ரோஹித் இருவரும் அடுத்த மாத தொடக்கத்தில் சிட்னியில் தங்கள் கடைசி டெஸ்டில் விளையாட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லங்கா டி-10 போட்டியில் ஓய்வு பெற்ற 11 வீரர்கள்



கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் இப்போது நடைபெற்றுவரும் லங்கா டி–10 கிரிக்கெட் லீக்கில் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெற்ற 11 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் விளையாடி வருகின்றனர். அவர்களில் 7 இலங்கை வீரர்கள் மற்றும் 3 பாகிஸ்தான் வீரர்கள், இந்தியா மற்றும் பங்களாதேசை சேர்ந்த தலா ஒரு வீரரும் அடங்கியுள்ளனர்.

கண்டி போல்ட்ஸ் அணியிலே அதிகமான ஓய்வு பெற்ற வீரர்கள் விளையாடுகின்றனர்.

இதில் தலைவர் திசர பெரேரா சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதுடன், சதுரங்க டி சில்வா, மிலிந்த் சிறிவர்தன, ஷெஹான் ஜயசூரிய, சேக்குகே பிரசன்ன மற்றும் பாகிஸ்தான் வீரர் இமாட் வாசிம் ஆகியோரே ஓய்வு பெற்ற வீரர்களாவர்.

இப்போட்டியில் ஒரு அணியில் அதிகபட்சமாக 18 வீரர்களே உள்வாங்கப்பட முடியும் என்பதுடன், கண்டி போல்ட்ஸ் அணியில் மூன்றில் ஒரு பங்கினர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றவர்களாவர்.

அந்த அணியைத் தவிர, கொழும்பு ஜகுவர்ஸ் மற்றும் நுவரெலியா கிங்ஸ் அணிகளில் தலா இரண்டு ஓய்வு பெற்ற வீரர்களும், ஹம்பாந்தோட்டை பங்களா டைகர்ஸ் மற்றும் யாழ் கிங்ஸ் அணிகளில் தலா ஒரு வீரர் என்ற வகையில் இடம்பெற்றுள்ளனர். இப்போட்டியில் பங்குபற்றும் அணிகளில் காலி மார்வெல்ஸ் அணியில் மட்டுமே ஓய்வு பெற்ற வீரர் இடம்பெறவில்லை.

தேசிய அணியின் வாயிற் கதவு திறக்குமா என பல திறமையான வீரர்கள் காத்துக் கொண்டிருக்கும் நிலையில் இப் போட்டித் தொடரில் இவ்வாறான ஓய்வுபெற்ற வீரர்களைச் சேர்ப்பதன் மூலம் போட்டியில் எதிர்ப்பாக்கப்படும் தன்மை குறைவதோடு, தேசிய அணியில் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படும் திறமையான கிரிக்கெட் வீரர்களை இனங்காணும் சந்தர்ப்பங்கள் விடுபட்டுப் போவதாக கிரிக்கெட் விமர்ச கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.அத்தோடு வேகமாக துடுப்பெடுத்தாடும் இரண்டாம் வரிசை வீரர்களை அடையாளம் காணும் வாய்ப்பு மழுங்கடிக்கப்படுகிறது.

**ஓய்வு பெற்ற வீரர்கள்**

**கண்டி போல்ட்ஸ் :** திசர பெரேரா (கப்டன்), சதுரங்க டி சில்வா, மிலிந்த் சிறிவர்தன, ஷெஹான் ஜெயசூரிய, செக்குவின் பிரசன்னா, இமாத் வாசிம் (பாகிஸ்தான்).

**கொழும்பு ஜாகுவார்ஸ் :** ஏஞ்சலோ பெரேரா, ரோனி தாலுக்தார் (பங்களாதேஷ்).

**நுவரெலியா கிங்ஸ் :** சௌரப் திவாரி (இந்தியா) – கெப்டன், உமர் அக்மல் (பாகிஸ்தான்).

**ஹம்பாந்தோட்டை**

**பங்களா டய்கர்ஸ் :** இசுரு உதான.

**ஜப்னா கிங்ஸ் :** முஹமட் அமீர் (பாகிஸ்தான்).



மாத்தளை மாவட்ட கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்ட கழகங்களுக்கிடையிலான கால்ப்பந்தாட்டப் போட்டி மாத்தளை பர்ணாட் அலுவிஹார விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஶ்ரீலங்கா கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் ஓமர் போட்டியில் வெற்றியீட்டிய சாம்பியன் மற்றும் ரனஸ்அப் அணிகளுடன் எடுத்துக் கொண்ட படங்கள்.

**படங்கள்: எம்.எஸ்.எம்.மஸாஹிம்**

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 20ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.